விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2036 மார்கழி 27 புதன்கிழமை (11.01.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 23

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## படையினரால் இளம்யுவதி கடத்தப்பட்டார் கோண்டாவிலில் நேற்று திகில் சம்பவம்

(கோண்டாவில்)

திருநெல்வேலி பாற்பண்ணை – கோண்டாவில் இந்து மயான வீதி யால் சென்ற இளம் யுவதி ஒருவரை படையினர் கடத்திச் சென்ற திகில் சம்பவம் நேற்று நடந்துள்ளது.

நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் இளம் யுவதி ஒருவர் துவிச்சக் கரவண்டியில் கோண்டாவிலிலிருந்து மயான வீதியால் சென்று கொண்டிருந்தபோது அப்பகுதியில் நின்றிருந்த படையினர் பிரஸ்தாப இளம்யுவதியை கையில் பிடித்து இழுத்துச்சென்றதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

இதனை நேரில் கண்ட இளைஞன் ஒருவன் மக்களிடம் முறையிட்ட தையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த மக்கள் காணாமல்போன யுவதி யைத் தேடினர்.

சம்பவத்தையடுத்து அங்கு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவி னரும் விரைந்துசென்று விசாரணைகளை மேற்கொண்டனர். இதே வேளை யுவதி கடத்தப்பட்டதாகக் கூறப்படும் இடத்திற்குச் சென்ற யாழ். மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் கடத்தப்பட்ட யுவ தியை உடனடியாகக் கண்டுபிடிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

படையினரால் யுவதி கடத்தப்பட்ட சம்பவத்தையடுத்து திருநெல்வேலி கோண்டாவில் பகுதியில் பெரும் பதற்றம் நிலவுகிறது. (ந-130)

விசாரணைகளை மேற்கொள்ளும் கண்காணிப்புக்குழுவினர்.



## திருகோணமலையில் நேற்று தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வு

(திருகோணமலை)

தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வு திருகோணமலை மாவட் டம் மூதூர் கிழக்கு கடற்கரைச்சேனை பொது விளையாட்ட ரங்கில் நேற்று நடைபெற்றது. மைதானத்தில் கூடிய பெருந் திரளான மக்கள் தமது உரிமைக்காக உரத்துக்கோஷமிட் டனர்.முன்னதாக எழுச்சி நிகழ்வுகள் மாலை 4 மணிக்கு ஆரம்பமாகின. தமிழ் தேசிய எழுச்சிக்குழுத் தலைவர் ரட்ண சிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்;

பொதுச் சுடரினை இரண்டு மாவீரர்களின் தந்தை அருளானந்தம் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை இரண்டு மாவீ ரர்களின் தந்தை அரசரட்ணம் ஏற்றினார்.

நிகழ்வில் ஆசியுரைகளை இந்துமதகுரு செல்வரட்ணம், மெதடிஸ்த திருச்சபையின் சில்வெஸ்ரார் அடிகளார் ஆகி யோர் நிகழ்த்தினர். தொடர்ந்து அரங்கில் அரங்க செயற்பாட் டாளர்கள் விந்தன் தலைமையில் அரங்காற்றுகை நடை பெற்றது.

சிறப்புரைகளை திருகோணமலை மாவட்ட தமிழ்மக்கள் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரன், தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சிவாஜிலிங்கம், துரை ரட்ணசிங்கம் மற்றும் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பா ளர் எழிலன் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து எழுச்சிப் பிரகடனம் வெளியிடப்பட்டது. (04)

## இராணுவம் மீதான தாக்குதல்; யார் எனத் தெரியாது

# நிலைமை மோசமடைந்தால் கண்காணிப்புக்குழு வெளியேறும்

## அதன் தலைவர் ஹக்ரூப் அறிவிப்பு



(ரொய்டர்)

**இராணுவத்தின் மீதான தாக்குதல்களுக்கு யார் காரணம் என்பதற்கான ஆதாரங்கள் எம்மிடம் இல்லை என்று இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹக்ரூப் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார்.**

**ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனத்திற்கு அவர் அளித்த பேட்டி யிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

அதிகரித்துவரும் வன்முறைகளுக்கு தமிழீழ விடு தலைப் புலிகளும் இராணுவமும் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டிவரும் நிலையில் வடக்கிலிருக்கும் பொது மக்கள் பாதிக்கப்படுவதுடன், அவர்களின் அனேகமா னோர் தங்களின் இடங்களில் இருந்து வெளியேறி வருகின்றனர். இந்நிலைமை கடந்த டிசம்பர் மாதம் முதல் மோசமடைந்துள்ளது.

இந்தத் தாக்குதல்களின் பின்னால் இருப்பவர்கள் பொதுமக்கள் மீது பாதிப்பினை ஏற்படுத்துகின்றோம் என்பதை உணரவேண்டும். இதனால் பாதிக்கப்படு வது பொதுமக்களே.

சமாதான முயற்சிகளில் ஈடுபாட்டுடன் இருப்பதாக இருசாராரும் கூறினாலும் அவர்களால் பேச்சுவார்த் தைக்கான இடம் குறித்து ஒரு இணக்கப்பாட்டை ஏற் படுத்திக்கொள்ள முடியாதுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் *(12 ஆம் பக்கம் பார்க்க)*

### படையினரின் அச்சுறுத்தலுக்கு எதிராக

## ஊடகவியலாளர்கள் நாளை ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அவசரகாலச்சட்டத்தைப் பயன்படுத்தி ஊடகவியலாளர்களைக் கைது செய்தல், இடையூறு விளைவித்தல் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீது சோதனை நடத்துதல் ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக நாளை ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், தமிழ் ஊடகவியலா ளர் ஒன்றியம், சிறிலங்கா முஸ்லிம் மீடியா அமைப்பு மற்றும் ஊடக ஊழி யர் தொழிற்சங்கம் என்பன இணைந்து நடத்தும் இவ் ஆர்ப்பாட்டத்தில் அரசியல் கட்சிகள் தவிர்ந்த சுதந்திர ஊடகத்தை வரவேற்கும் அனை வரும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ந)

## புடைவைக் கடையில் பணிபுரிபவர் சாவகச்சேரியில் சுட்டுக்கொலை

மீசாலையைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று மாலை 5.50 மணியள வில் சாவகச்சேரி டச்சுவீதியில் இடம்பெற்றுள்ளது. கொலையுண்டவர் உமா சங்கர் (வயது 28) என அடையாளம் காணப்பட்டுள்ளார். பிரஸ்தாப நபரை இராணுவத்தினரே சுட்டுக்கொன்றதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

சாவகச்சேரியில் உள்ள வசந்தா புடைவையகத்தில் பணிபுரியும் இவர் வேலைமுடிந்து வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருக்கையில் இச்சம்பவம் இடம்பெற்றது. சடலம் பிரேத பரிசோதனையின் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ந-108,29)

## கிணற்றில் தவறி வீழ்ந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றில் தவறிவிழுந்த குடும் பஸ்தர் மரணமானார். இச் சம்பவம் நேற்று முன்தினமிரவு விதா னையார் லேன் சுண்டுக்குளியில் இடம்பெற்றுள்ளது.

யாழ். மாநகரசபையின் தீய ணைப்புப் பிரிவில் பணிபுரியும் பஞ்சாட்சரம் ஸ்ரீபாலன் (வயது 38) என்பவரே மரணமானவராவார். (ந)

## உள்ளூராட்சித் தேர்தல் மார்ச் இறுதிப் பகுதியில்

### அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு உட்பட நாடுமுழுவதும் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்படுமென மாகாணசபை உள்ளூராட்சி மன்ற அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார். உள்ளூராட்சி மன்றங்க ளுக்கான தேர்தல்கள மார்ச் மாத இறுதிக்குள் நடத்தப்படுமென்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.


பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் அரசியல் அதிகாரிகள் ஆகியோருடன் நேற்று நடைபெற்ற சந்திப்பின் பின்னரே இவ்வறிவித் தலை அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் விடுத்தார். (ந-39)

# முதல் சுதேச ஆயரின் வாழ்வும் பணியும்

## 'சீர் சமைத்த சிற்பி' நூல் வெளியீட்டு விழாவில் பாராட்டு

"பொதுவாக இலங்கையிலும் சிறப்பாகத் தமிழர் தாயத்திலும் இடம்பெற்ற நிகழ்வுகள், பணிகள் மற்றும் வாழ்ந்து மறைந்த பெரியோர் பற்றிய ஆய்வுகளுக்கு யாழ். பல்கலைக்கழகம் முதன்மை இடம்கொடுக்கின்றது.

கடந்த 19ஆம் திகதி திங்கட்கிழமை மாலை யாழ்ப்பாணம்'' அகவொளி குடும்பவளத்துணை



நிலையக் கேட்போர் கூடத்தில், யாழ்ப்பாணக் கத்தோலிக்க மறை மாவட்டத் திருச்பையில் ஆயர் ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ் பிள்ளை அ.ம.தி.யின் (1901-1972) வாழ்வும் பணியும் பற்றிய 'சீர் சமைத்த சிற்பி' ஆய்வு நூல் வெளியிட்டு விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட பேராசிரியர் அ.சண்முகதாஸ் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அருட்பணி ஜே.பி.ஈ. செல்வராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இ.தோமஸ் சவுந்தரநாயகம் பிரதம விருந்தினராகவும், பேராசிரியர் அ.சண்முகதாஸ் கௌரவ விருந்தினராகவும் அருட்கலாநிதி ஜே.ஈ.ஜெயசீலன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

விழா ஆரம்பத்தில் மறைந்த முன்னாள் முதல் சுதேச தமிழ் யாழ். ஆயர் ஜேக்கப்பிள்ளை ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளையின் படத்திற்கு நூல் ஆசிரியரால் மலர் மாலை அணிவிக்கப்பட்டது. தற்போதைய யாழ்.ஆயர், அருட் சகோதரி யுஸ்தீனா, தி.கு.ச.மறைப் போதகர் கி.கி.பங்கிராஸ் மூவரும் ஆயரின் படத்திற்கு விளக்கேற்றினர்.

நூலை அறிமுகம் செய்து வெளியீட்டுரையை நிகழ்த்திய சிறப்பு விருந்தினர் அருட்திரு கலாநிதி ஜே.ஈ.ஜெயசீலன் தமது உரையில் யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் முதல் சுதேச ஆயரின் வாழ்வையும் பணியையும், முகம் பார்க்கும் கண்ணாடி போல் மட்டும் அல்லாது, மாறாக மறுபுறம் உள்ளவற்றைப் பார்க்கக்கூடிய கண்ணாடி போன்று தெளிவாக, ஆசிரியர் அருட்பணி குரூஸ் யேசுதாஸ் அன்ரனிபாலா அவர்கள் எடுத்துக்காட்டியுள்ளார். பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் மேல்தட்டு நடுத்தரவர்க்க, வர்த்தக முதலாளித்துவத்தால் உருவாக்கப்பட்ட முதல் சுதேச ஆயா, மண்ணில் வேரூன்றிக் கொண்டிருந்த சுதேச திருச்சபையின் சவால்களுக்குத் துணிவுடன் முகங்கொடுத்தமையையும் அதில் அடைந்த வெற்றி தோல்விகளையும் பற்றி இந்நூலில் அழகாகவும் ஆழமாகவும் விளக்கியுள்ளார் எனக் கூறினார்.

யாழ்.ஆயர் நூலை வெளியிட்டுவைக்க முதற்பிரதியை கௌரவ விருந்தினர் பெற்றுக்கொண்டார். ஆயர் தமது உரையில் ஆசிரியரை வாழ்த்தியதோடு எமது மறைமாவட்ட அருட்பணியாளர்களும் அருட்சகோதரிகளும் பொது நிலையினரும் தமது உயர்பட்டப்படிப்புகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பங்களைத் தொடர்ந்தும் வழங்கி வரும் யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கு பாராட்டுத் தெரிவித்தார். ஆசிரியர் தமது ஏற்புரையில் இந் நூலை வெளியிட சிபார்சு செய்த தேர்வாளர்களுக்கும் அனுமதி அளித்த உயர்பட்டப் படிப்புகள் நிர்வாகத்தினருக்கும் நன்றி கூறினார். (து)

# வேலியே பயிரை மேய்ந்தால்?

(கொழும்பு)

மோசடி புலனாய்வுப் பணியகத்தில் கடமையாற்றும் இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இலஞ்ச ஊழல் மோசடி குற்றத் தடுப்பு ஆணைக் குழுவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இலஞ்சம் பெற முயன்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைதுசெய்யப்படவுள்ளனர்.

விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபரான பெண் ஒருவருக்கும் பிணை அனுமதி பெறுவதற்கு உதவிசெய்ய லஞ்சம்பெற முயன்றதாக இவர்கள் இருவர் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இவர்கள் இருவரும் 50ஆயிரம் ரூபாவை இலஞ்சமாக கோரியிருந்தனர். (து-08)

# சுவாமி விவேகானந்தரின் தேசிய இளைஞர் தினம்

சுவாமி விவேகானந்தரின் தேசிய இளைஞர் தினம் யாழ்ப்பாணத்திலுள்ள தேசிய பாடசாலைகளில் ஒன்றான யாழ்.இந்துக்கல்லூரியில் நாளை வியாழக்கிழமையும், யாழ்.வேம்படி உயர்தரப் பாடசாலையில் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் நடைபெறும்.

நாளை வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் 10 மணிவரை யாழ். இந்துக்கல்லூரியில் நிகழும் நிகழ்வுக்கு கல்லூரி அதிபர் வீ.கணேசராஜா தலைமைவகிப்பார். பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத் தலைவர் சுவாமி சித்ரூபானந்தா 'சுவாமி விவேகானந்தரின் அபிலாஷையாது?' என்றும் பொருள்பற்றி உரையாற்றுவா.

20ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.வேம்படி உயர்தரப் பாடசாலையில் பாடசாலை அதிபர் திருமதி க.பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும் நிகழ்விலும் சுவாமி சித்ரூபானந்தா உரையாற்றுவார்.

யாழ்.இந்துக்கல்லூரியில் மைசூர் ராமகிருஷ்ணமட வெளியீடான சுவாமி விவேகானந்தரின் விளக்கப்படங்கள் காட்சிக்கு வைக்கப்படும் எனவும், மேற்படி படங்களை மாணவர்கள் பார்த்தபின் அதனையொட்டி போட்டி நடைபெறும் எனவும் ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம செயலாளர் தெரிவித்துள்ளார். (து)

# பட்டிப்பொங்கலும் கோமாதா பூஜையும்

எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிறுக்கிழமை காலை 10மணிக்கு சத்திரம் ஞானவைரவராலயத்தில் பசுக்கள், இடபங்கள் பாதுகாப்பு இணையத் தலைவர் சைவப் புலவர் க.செல்லத்துரை தலைமையில் படடிப்பொங்கலும் கோமாதா பூஜையும் நடைபெறவுள்ளது.

பட்டிப் பொங்கல், கோபூஜை கோதனத் திருமுறையோதல் நிகழ்ச்சிகளையடுத்து ஆசியுரைகள், வரவேற்புரை சிறப்புரைகள் இடம்பெறும்.

நாட்டு நிலைகருதி இம்முறை பசுக்கள் ஊர்வலம் நடைபெற மாடடாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (து)

# இராசி பலன்

**11.01.2006**
**(மார்கழி 27, புதன்கிழமை)**
**துவாதசி பிற்பகல் 1.21 மணிவரை**
**ரோகினி மாலை 5.46 மணிவரை**
**இராகுகாலம் 12.33-2.03 மணிவரை**
**சுபநேரம் 5.03-6.33 மணிவரை**
**பிரதோச விரதம்**

**மேடம்** — தொழில் மந்தநிலை, பணவிரயம், செல்வாக்கு குறைவு, போசன சுகம்.

**இடபம்** — சிந்தனை மிகுதி, விருந்துபசாரம், எடுத்த கருமங்கள் கைகூடும், குடும்பக்கவலை.

**மிதுனம்** — பிறருக்கு உதவுதல், காரிய அலைச்சல், சுபசெலவு, திடீர் நன்மை.

**கடகம்** — எடுத்த காரியம் கைகூடும், சகோதரர் உதவி, கீர்த்தி, கலந்துரையாடல்.

**சிங்கம்** — அதிகாரம், தூரதேசச்செய்தி, அதிக பிரயாசை, தெய்வசிந்தை.

**கன்னி** — சரீரப்பிரயாசை, பிரயாணம், கட்டுப்பாடு, தந்தைவழி உறவு.

**துலாம்** — வாகனபயம், நண்பர்கள் வெறுப்பு, காரிய தாமதம், போசனசுகம்.

**விருச்சிகம்** — நண்பர்கள் சந்திப்பு, காரிய அனுகூலம், போசன சுகம், சொத்துக்களால் நன்மை.

**தனுசு** — தடைப்பட்ட காரியம் கைகூடும், விருந்துபசாரம், கற்பனைமிகுதி, மாதர்நட்பு.

**மகரம்** — வியாபார சிந்தை, முயற்சி தாமதம், ரோக நிலை, நண்பர்கள் சந்திப்பு.

**கும்பம்** — அதிகாரம், மாதாசுகம், மனச்சஞ்சலம், முயற்சி தாமதம்.

**மீனம்** — அன்னியர்சந்திப்பு, புதிய தகவல், காரிய அனுகூலம், சகோதரர் உதவி.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

# சமாதான நடவடிக்கையில் பங்கெடுக்க தமிழ்ப் பெண்கள் தயாராக இருக்கின்றனர்

## பத்மினி சிதம்பரநாதன் எம்.பி. அறிக்கை

தமது இரட்டைத்தன்மையை விட்டு விட்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு உகந்த நல்லெண்ணச் சூழலை உருவாக்க சிங்களத் தலைவர்கள் முன்வரவேண்டும். அவ்வாறு அவர்கள் முன்வரு வார்களாயின் தமிழ்ப் பெண்கள் அதற்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கத் தாயராக உள்ளார்கள்.

இவ்வாறு தெரிவித்துள்ளாார் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுபபினர் பத்மினி சிதம்பரநாதன். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்

இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர உத்தியோகபூர்வ அமெரிக்க விஜயத்தை மேற்கொண்டு, அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொண்டலீசாரைசை கடந்த 5ஆம் திகதி வாஷிங்டனில் சந்தித்தார்.

இச்சந்திப்பின் போது, இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வுக்கு இலங்கை அரசாங்கம் ஈடுபாடு கொண்டுள்ளது எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்து 7கிழமைகளில் 6தடவை விடுதலைப் புலிகள் அமைப்பினரை புரிந்துணர்வு உடன்படிக்கையை பலப்படுத்தவும், அரசியல் தீர்வுகாணவும் என பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைத்துள்ளார் எனவும் கூறிய இதே அமைச்சர் மங்கள சமரவீர அங்கு நின்று வாஷிங்டன் ரைம்ஸ் பத்திரிகைக்கு புலிகள், அல்ஹொய்தாவையும் விட மோசமான படுகொலையாளர்கள் அவர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமற்றவர்கள். எனவே அமெரிக்கா புலிகள் விடயத்தில் கடும் போக்கை கடைப்பிடிக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

மேலும் அவர், அரச தரப்பு தாராளமாக விட்டுக்கொடுத்துள்ளது எனவும் இனி புலிகள் தரப்பு தாங்கள் சமாதானத்துக்கும், ஜனநாயகத்துக்கும் தயார் என்பதை பேச்சளவில் மட்டுமல்லாது செயலில் காட்ட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இதுவரைகாலமும் இனப்பிரச்சினை தொடர்பாக எனன வழிவகையை தெற்கு அரசாங்கங்கள் கையாண்டதோ அதுவே எந்த மாற்றமும் இல்லாது தொடர்கின்றது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா சமாதானத்தை ஏற்படுத்துவதில் மிகவும் அர்ப்பணிப்பாக உள்ளார் என பழைய வெளிநாட்டமைச்சர் தூதராலயங்களையும், சர்வதேச நாடுகளையும் நம்பவைக்க முயன்றார்.

இப்போதைய வெளிநாட்டமைச்சரும் (முன்னைய வெளிநாட்டமைச்சரையே பின்பற்றப்போகின்றேன் எனக்கூறியவர்) இதையே செய்ய முனைகின்றார். அல்ஹொய்தாவையும்விட புலிகள் மோசமானவர்கள் என்ற எண்ணத்தை மனதில் வைத்துக்கொண்டு தூய மனதுடன் சமாதானத்துக்கு அர்ப்பணிப்பாக இருக்க முடியுமா? இது வெளிநாட்டமைச்சர் மங்கள சமரவீரவின் மனதின் இரட்டைத்தன்மையை எடுத்துக்காட்டுகின்றது.

அரச தரப்பு தாராளமாக விட்டுக்கொடுத்துள்ளது என்று கூறப்படுகின்றது. 2002இல் பேச்சுவார்த்தை நடைபெற்றபோது தோன்றாத சில்லறைப் பிரச்சினைகள கூட இப்போது கிளப்பப்படுகின்றது. பேசப்படும் விடயத்தில் அல்லாமல் பேசும் இடம் தொடர்பாகக் கூட இப்போது பிரச்சினைகள், நிர்ப்பந் தங்கள் எழுகின்றன என்றால் விட்டுக் கொடுப்பு எந்தளவில் உள்ளது எனபதை அமெரிக்கா புரிந்து கொள்ளமாட்டதா?

புலிகள் சமாதானத்துக்கும் ஜனநாயகததுக்கும் தயார் என்பதை பேச்சளவில் மட்டுமல்லாது செயலிலும் காட்ட வேண்டும் என்று கூறியுள்ளார். அவரிடமே இரட்டைத் தன்மையை வைத்துக்கொண்டு அவர் எப்படி இவ்வாறு சொல்ல முடியும்? சமாதானத்துக்கான புறச்சூழல் அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளதா? என்பதை கேள்வி கேட்டுப் பார்க்க வேண்டும் நல்லெண்ண புறச்சூழல் நிலவவேண்டிய நிலையில் கடும் போக்காளர்கள் படைத் தரப்பில் நியமிக்கப்பட்டதேன்?

செம்மணிப் படுகொலைகளால் வேதனையையும், ஆத்திரத்தையும் கொண்டுள்ள தமிழ் மக்கள் அணமையில் புங்குடுதீவில் தர்ஷினிக்கு நடைபெற்ற பாலியல் வலலுறவையும் படுகொலையையும், மன்னாரில் நடைபெற்ற கிளைமோர் தாக்குதலுக்கு பழிவாங்கும் நடவடிக்கையாக பொதுமக்களை கொலைசெய்தமை அதிலும் குழந்தையைக் கூட எரியூட்டிய சம்பவம் திருமலையில் 5 மாணவர்களையும் காதுக்குள் வேட்டுக்களைத் தீர்த்து கொலை செய்த சம்பவம், பல்கலைக்கழக உபவேந்தர், பீடாதி பதிகள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை, ஆழ ஊடுருவும் படையினர் போராளிகளைத்தாக்கி கொலைசெய்தமை அப்பாவிப் பொதுமக்கள் தாக்கப்படுகின்றமை, காணாமல் போகும் நிலைமை, பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உட்படுகின்றமை, மட்டக்களப்பில் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மனித உரிமைவாதியுமான ஜோசப்பரராஜசிங்கம் புனித நததார் தினத்தில் தேவாலயத்தில் வைத்து கொல்லபபட்டமை போன்ற சம்பவங்களால் மேலும தமிழ் மக்கள் கவலையிலும் ஆத்திரத்திலும மூழ்கியுள்ளனர்.

இவ்வாறு அவர்களை இந்த உணர்வுகளில் மூழ்க வைத்துக் கொண்டு 7 வாரத்தில் 6தடவை பேச்சுக்கு வெறும்வாய் அழைப்பு மட்டும் விடுத்தது போதுமா? நல்லெண்ண சூழலை ஏற்படுத்தத் தேவையில்லையா? இரட்டைத்தன்மையுள்ள இந்த பழைய முறைகளை கைவிடவேண்டும்.

நல்லெண்ணச் சூழலை ஏற்படுத்துவதுவதற்கு மாறாக அரசு தமிழ் இளைஞர்களை ஆத்திரமூட்டுகினறது. நாம் இந்த இளைஞர்கள் அமைதியடைய வேண்டும் என்றே விரும்புகின்றோம் அரசாங்க படைகள் ஆத்திரமூட்டலைக் கைவிடுவது இதற்கு அவசியமாகும்.

படையினரை தமிழ் மக்கள் தமது பாதுகாப்புப் படையினராக கருதவில்லை என்ற உண்மையை சிங்கள மக்களும் அதன் தலைவர்களும் புரிந்துகொள்ள வேண்டும். அதனை ஒரு ஆக்கிரமிப்புப் படையாகவே கருதுகின்றனர். இன்னும் விளக்கமாக சொல்லப்போனால் சிங்கள, தமிழ் முரண்பாட்டு கூர்மையில் இந்த முரண்பாட்டை தீர்க்கும் சிங்கள வழிவகையாக சிங்கள மக்கள் சிங்கள இளைஞர்களை ஆயுதங்களுடன் தமிழ் குடியிருப்புகளுக்கு அனுப்பி தமிழ் மக்களை அச்சுறுத்தவும் பணியவைக்கவும் முயல்கிறார்கள் என்றே தமிழ் மக்கள் கருதுகின்றார்கள். இந்த உணமையை சிங்கள மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே தமிழர் குடியிருப்பில் உள்ள படையினரை யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் கூறியபடி விலக்குவதன் மூலம் இளைஞர்களை ஆத்திரமூட்டுவதை நிறுத்தி பேச்சுவார்த்தைக்கு உகந்த ஒரு நல்லெண்ண சூழலை ஏற்படுத்தலாம். இவ்வாறாக நம்பிக்கைச் சூழல் உருவாக்கப்படும் பட்சத்தில் தமிழ் மக்கள் குறிப்பாக பெண்களும் மிகவும் அர்ப்பணிப்புடன் சமாதான நடவடிக்கையில பங்கெடுக்க தயாராக இருக்கின்றனர் என்பதை இவ் விடத்தில சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் என்றுள்ளது. (க)

# மாணவர்களை இடையூறு செய்யும் இராணுவ நகர்வுகள் இருக்கக்கூடாது

## சர்வதேச சமூகத்திடம் கனடா கால்ற்றன் பல்கலை மாணவர்கள் வேண்டுகோள்

(கனடா)

கல்விச்சாலைகள் சார்ந்திருக்கும் சுற்று வளாகத்தினுள் எந்த ஒரு இராணுவப் பயிற்சி முகாமோ, இராணுவக் காவலரண்களோ, இராணுவ நடமாட்டமோ இருக்கக் கூடாது என கனடா கால்ற்றன் பல்கலைக் கழக தமிழ் மாணவர் அமைப்பு சர்வதேச சமூகத்தைக் கேட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில்,

இந்த ஜனநாயக அத்துமீறல்களை இலங்கை அரச படைகள் உடனடியாக நிறுத்த வேண்டும். இது சார்ந்த அழுத்தத்தினை கனேடிய அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையினையும் சர்வதேச சமூகத்திற்கு புலம் பெயர்ந்த தமிழ் மாணவர்களாகிய நாம் முன் வைக்கின்றோம்.

இலங்கை இராணுவத்தினரின் வன்முறைகளில் இருந்து எம்மைப் பாதுகாத்து கொள்ளவே நாம் புலம் பெயர் அகதிகளாய் இங்கு தஞ்சம் புகுந்தோம். கனேடியத் தமிழர்களாய் நாம் இங்கு வளர்க்கப்பட்டிருந்தாலும் எமது இரத்த உறவுகளில் பலர் இலங்கையில் மாணவர்களாய் கல்வி பயில்கின்றனர். அவர்கள நாளாந்தம் எதிர் நோக்கும் பிரச்சினைகளை அவர்களுடனான நேரடித் தொடர்புகள் எமக்குப் பகிரங்கப்படுத்துகின்றன.

எம் தாயகத்தில் எமது மாணவ ச்கோதரர்களுக்கு எதிராக நடாத்தப்படும் கைது நடவடிக்கைகள், தாக்குதல்கள், சித்திரவதைகள், பாலியல் துன்புறுத்தல்கள், மற்றும் ஈவிரக்கமற்ற கொலை நடவடிக்கைகள் என்பன புலம் பெயர மாணவர் சமூகத்திற்கு பெரும் அதிர்ச்சியைத் தரும்.

அதேவேளை எமை விரக்தியின் விளிம்பிற்கே இட்டுச் செல்கினறன. எமது சகோதரர்களில் யாரேனும் எப்போதாவது கொல்லப் படலாம் என்கின்ற வேதனை எமை ஆழ்ந்த மன உளைச்சலுக்கும், ஆத்திரத்திற்கும் உள்ளாக்கி இருக்கிறது.

கனேடியப் பல்கலைகழகங்களில் பட்டதாரி கல்வியினை மேற்கொண்டிருக்கும் நாம் இந்நிகழ்வுகளால் பெரும் மனச் சஞ்சலத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறோம். தொடரும் இவ் மன அழுத்தங்களால் எமது கல்வி சார் திறன்கள் மழுங்கடிக்கப்பட்டு சமுதாயத்தில் எமது அங்கீகாரமும் மட்டுப்படுத்தப்படுகிறது. கனேடிய பொருளாதாரத்திற்குப் பெரும் பங்களிப்பு செய்து வரும் கனேடிய தமிழ் மாணவர்களாகிய எமது நிலைப்பாட்டினை கனேடிய அரசு புரிந்து கொள்ளும் என நாம் திண்மையாக நம்புகிறோம்.

எமது முற்று முழுதான திறனை கனேடிய அரசு உள்வாங்கிக் கொள்ள வேண்டுமெனில், எமது மன உளைசசலுக்கு அடிவேராய் இருக்கும் ஈழத் தமிழ் மாணவர்களுக்கு எதிரான வன்முறைகள் நிரந்தரமாக நிறுத்தப்பட வேண்டும். இதற்கு கனேடிய அரசு எமக்கு உதவ முன்வர வேண்டும்.

கல்வித்தரப்படுத்தல் என்கிற பெயரில் ஈழத்தமிழ் மாணவர்கள் மீது ஆரம்பிக்கப் பட்ட அடக்கு முறையானது அண்மைக் காலங்களில் காட்டுமிராண்டித்தனத்தின் உச்சக கட்டத்தை எய்தியுள்ளது. இலங்கை அரச படைகளின் மிலேச்சத்தனதிற்கு ஆதாரமாக பின்வரும் சமீபத்திய நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

இளையதம்பி தர்சினி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப் பட்டமை, யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் அமைதிப் பேரணியில் இலங்கை இராணுவம் நடாத்திய துப்பாக்கிச் சூடு, அருள் அஜந்தன் கொடூரமாகச் சுட்டுக் கொலை செய்யப்பட்டமை, திருகோணமலையில் அராஜகமான முறையில் ஐந்து மாணவர்கள் காடைத்தனமாகச் சுட்டுக் கொல்லப்பட்டமை.

ஆகிய சம்பவங்கள் குறுகிய காலத்தில் இலங்கைக் கண்காணிப்புக் குழுவினர் தொழிற்பாட்டில் உள்ள பொழுது நடந்துள்ளதுடன் இதில் சம்மந்தப்பட்ட கயவர்கள மீது எந்த விதமான சட்ட ரீதியான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இவ்வடயங்கள் தொடர்பாக தகுந்த தரவினை ஏற்படுத்தக் கூடிய திறமையும், ஆளுமையும் கனேடிய அரசிற்கு முழுமையாக இருக்கிறது என்பதை நாம் ஆணித்தரமாக நம்புகின்றோம். உலக சமாதானத்தின் மீதும் தனி மனித உரிமைகள் மீதும் ஆழ்ந்த ஈடுபாடடினையும் அது சார்ந்த செயல்திட்டங் களையும் அமுல்படுததும் கனேடிய அரசானது எம் சார்பில் ஈழத்தமிழ் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்தும் நடவடிக்கைகளிலும், செயல் திட்டங்களிலும் ஈடுபட வேண்டும் என நாம் வேண்டி நிற்கின்றோம்.

எமது ஈழத்தமிழ் மாணவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு குறைந்த பட்ச கோரிக்கைகள் சிலவற்றை கனேடிய அரசுக்கும் சர்வதேசத்திற்கும் முன் வைக்கினறோம. இக்கோரிக்கைகளை அமுல்படுத்துவதற்கான அழுத்தங்களை கனேடிய அரசும், சர்வதேசமும் இலங்கை அரசுக்குக் கொடுக்க வேண்டும் என்பதனை புலம் பெயர் மாணவர் சார்பில் நாம் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம் என்று குறிப்பிட்டுள்ள அந்த அறிக்கையில் 5கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அவை வருமாறு,

எமது மாணவச் சகோதரிகள் மீது தொடரும் பாலியல் துன்புறுத்தல்கள் உடனடியாக நிறுத்தப்பட்டு, அவர்கள் விரும்பும் முழுப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் வழங்கப்பட வேண்டும்.

கல்விச்சாலைகள் சார்ந்திருக்கும் சுற்று வளாகத்தினுள் எந்த ஒரு இராணுவப் பயிற்சி முகாமோ, இராணுவக் காவலரண்களோ, இராணுவ நடமாட்டமோ இருக்கக் கூடாது.

தொடர்ந்து மாணவர்களைக் கைது செய்தல், சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு அப்பாறபட்டு சித்திரவதைக்கு உள்ளாக்குதல், அவரகளின் தனிமனித சுதந்திரம் மற்றும் பேச்சுரிமை ஆகியவற்றை ஒடுக்குவதன் மூலம் அவர்களை ஆழ்ந்த மன உளைச்சலுக்குள்ளாக்கி அவர்களின் திறன்களை அழித்தொழித்தல் ஆகிய நடவடிக்கைகள் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

ஒரு தனி மனித ஆளுமையை நிர்ணயிக்கும் கல்விக்கு ஊறு விளைவிக்கும் வண்ணம் எந்த ஒரு அரசியல் யாப்புகளோ, அரசியல் திட்டங்களோ, அரசியல் அழுத்தங்களோ செயல்படுத்தப்படக் கூடாது.

வட-கிழக்குத் தமிழ் மாணவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு சர்வதேசத்தின் சார்பில் பொது நபர் ஒருவர் போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவினருள் இடம்பெற வேண்டும்.

மேற்குறிப்பிட்ட கோரிக்கைகளாவன ஒரு தனி மனிதனின் மனித உரிமைகளின் அத்தியாவசிய செயற்பாடுகளே என்பதை சர்வதேசம் புரிந்துகொள்ளவேண்டும்.

இது தவிர இடம்பெயர்ந்து வாழும் ஒவ்வொரு தமிழ் மாணவனும்,மாணவியும் தாயகததில் அவதியுறும் தமது சகோதரங்களுககாய் குரல் கொடுக்கவேண்டும்.

இவ்வாறாக தாயக தமிழ் மாணவர்கட்கு உதவும் சர்வதேச தமிழ் மாணவர் சமூகத்துடன் கால்ற்ரன் தமிழ் மாணவர் அமைப்பு இணைந்து நிற்கிறது.

இது குறித்து தகுந்த தீர்மானமான பதிலை சர்வதேசத்திடம் நாம் எதிர்பார்க்கும் அதேவேளை, கனேடிய அரசும் சிறந்த வகையில் தமது நகர்வுகளை மேற்கொள்ளும் என நாம் திடமாக நம்புகின்றோம் என்றும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

# இளையோர் தொழில் பயிற்சி கல்லூரி திறந்து வைப்பு





தமிழீழத் தேசியத் தலைவரால் வழங்கப் பட்ட நிதியில் றீடோ நிறுவனத்தால் அமைக் கப்பட்ட இளையோர் தொழில் பயிற்சிக் கல்லூரி ஒன்று அண்மையில் முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பில் திறந்து வைக் கப்பட்டது.

இந்நிகழ்வில் தொழில் நுட்பக் கல்லூரியை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் திறந்து வைத்தார்.

மின்ஒட்டு உந்துருளிகள் திருத்துதல், வெளியிணைப்பு இயந்திரம் திருத்துதல் போன்ற பயிற்சிகள் இந்தக் கல்லூரியில் முதற கட்டமாக உள்ளடக்கப்பட்டுள்ளது. இளையோர் அமைப்பைச் சேர்ந்த சொ.நரேஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் தயானந்தா, முல்லை மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் உட்பட பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். நிகழ்வில் முன்னதாக கப்டன் பண்டிதரின் தாயார் பொதுச்சுடர் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ அரசியற் துறைப் பொறுப்பாளர் ஏற்றினார். (க)

# படையினர் விதித்த தடையை ஏற்க முடியாது-எழிலன்

(திருகோணமலை)

திருகோணமலை துறைமுகக் கடலில் மீன்பிடிக்க கடற்படையினர் விதித்துள்ள தடையை ஏற்க முடியாது என்று விடுதலைப் புலிகளின் திருகோணமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்துள்ளார்.

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் கடல் கண்காணிப்பாளர் கிறேக்கும் அரசியல் பொறுப்பாளர் சி.எழிலனுக்கும் இடையில் சம்பூர் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை செயலகத்தில் நேற்று முன் தினம் முற்பகல் 11.00 மணிக்கு சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

சுமார் 30 நிமிட நேரம் வரை நீடித்த இச் சந்திப்பில் திருகோணமலையில் அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் சம்பவங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

கடற்படையின் கடல்வலய தடைச்சட்டத் தால் மீனவர்கள் எதிர்கொள்ளும் பேரவலம் குறித்தும் கண்காணிப்புக் குழுவினருக்கு எழிலன் விளக்கினார்.

ஸ்ரீலங்கா படையினர் மீது பலவகைகளில் இடம் பெறுகின்ற தாக்குதல்களுக்காக மக்களது தொழில் நடவடிக்கைக்கு தடை விதிபபதை தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் வலியுறுத்தினார். (த)

# அத்துமீறி நுழைந்து தாக்கினால் பாரிய விளைவுகள் ஏற்படும்

## தயா மோகன் எச்சரிக்கை

தமிழீழ விடுதலைப் புலிகளின் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து இராணுவம் தாக்குதல் நடத்தினால் எதிர்காலத்தில் பாரிய விளைவுகள் ஏற்படும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் பா. தயாமோகன் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் தயாமோகன் கூறியுள்ளதாவது? படையினர் போர் நிறுத்த உடன் பாட்டினை முழுமையாக மீறியுள்ளனர்.

எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து காவலரண் மீது தாக்குதல் நடததியது எம்மை மீண்டும் சினமூட்டி வலிந்து போருக்கு இழுக்கும் நடவடிக்கையாகும.

இத்தகைய சம்பவங்களால் எதிர்காலத்தில் பாரிய விளைவுகள் ஏற்படும் என்றார். தயாமோகன்.

இது தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறையிட்டுள்ளதாகவும் தயாமோகன் மேலும் கூறினார். (க)

## இன்று ஒரு தகவல்

# தனக்காக வாழ்க

'இதோ இருக்கிறாரே சார்! இவர் மற்றவர்களுக்காக தன்னையே தியாகம் செய்யத்தயாராக இருக்கிறார்" என்று யாராவது சொன்னால் அது ஏமாற்று வேலை என்கிறார் ஒரு பெரியவர். உங்களை நீங்கள் முதலில் கவனியுங்கள் சார். தனக்காக சேவை செய்துகொள்வது தான் உலக இயல்பு "இன்னொருவருக்கு சேவை செய்வதே நோக்கம்" என்று யாரும் இயங்க முடியாதாம. இதுவரை எந்த மனிதனுமே தனக்கென்று வாழாமல் இருந்ததில்லையாம்.

தனக்காக வாழ்வதில் இரண்டுவகை உண்டாம். ஒரு வகை எப்படியென்றால் தன்னுடைய நலனுக்காக மற்றவர்கள நலனை அழிப்பது தவிர்க்க முடியாமல் போவது. இன்னொருவகை எப்படியென்றால் தனக்காக வாழ்வதில் மற்றவர்களுக்கும் பல நல்ல பயன்கள் ஏற்படலாம். இந்த இரண்டாவது வகையில் தனது நலன்களை பாதுகாத்து வளர்ச்சியடைவதுதான் நல்லது. தனக்காக வாழ்வது என்பது மனித இயற்கை. இப்படி சொல்வது தவறாகத் தெரியலாம். பண்பாடு அற்றதாகவும் தோன்றலாம். ஆனால உண்மை அதுதான். இதற்கு ஒரு உதாரணமும் சொல்கிறாா அவர்.

ஓடுகின்ற வெள்ளத்தில் ஒருவன் விழுந்துவிட்டான் சார். அவனைக் காப்பாற்றுவதற்காக ஓடுகின்ற அடுத்தவன் கூட அடிப்படையில் பார்த்தால் தனக்கே ஒரு சேவையைத்தான் செய்து கொள்கிறான் எப்படி தெரியுமா? அவன் தண்ணீரில் விழுந்தவுடன் இவன் மனதில் ஒரு துன்பம் ஒரு கஸ்டம் ஏற்பட்டிருக்கிறது. அந்தத் துன்பத்தை போக்கிக் கொளவதற்காகவே இவனும் வெள்ளத்தில் குதிக்கிறான. அடுத்தவனைக் காப்பாற்றுகிறான்.

சமூக அமைப்பே நாம் யாரையும் யாருக்காகவும் தியாகம் செய்யச் சொல்லத் தேவையில்லாத தன்மையில் இருக்க வேண்டும். தன்னுடைய வாழ்க்கையை நடத்துவதற்குத்தான் ஒவ்வொரு மனிதனும் பிறக்கிறான். அப்படிப் பிறகும் மனிதன் தன்னுடைய நன்மையான செயற்பாடுகளில் ஈடுபடுவது நல்லதுதான். அது ஒன்றும் பாவமில்லை.

இப்படி இருக்கும் போது தனக்காக வாழும்படியாரும் போதனை செய்வதில்லை. 'நீ இந்த சமுதாயத்திற்காக வாழ். மனித குலத்திற்காகவாழ்' இப்படியெல்லாம் சொல்லி போதனை செய்வதனால் போலித்தன்மைதான் ஏற்படுகிறது என்கிறார் அவர். தனக்காக வாழ்தலே கொஞ்சம் ஆழமான நிலையில் மற்றவர்களுக்கும் சேவை செய்வதாக ஆகலாம்.

இன்னொருவிஷயம் மற்றவர்களைப் பார்த்துவிட்டு அவர்களை மாதிரி ஆக வேண்டும் என்று முயற்சி செய்யக்கூடாது.மற்றவர்கள் மாதிரி ஆகும் முயற்சியில் உங்களை நீங்கள் இழந்துவிடுவீர்கள். இதனால் நீங்கள் தானாக அடையக் கூடியவளர்ச்சியை அடையாமல் தவற விட்டு விடுவீகள். நீங்கள் எந்த அளவுக்கு முனனேற முடியுமோ அதை முழுமையாக அடைவதுதான் உண்மையான இலட்சியமாக இருக்கவேண்டும்.

இதெல்லாம் ஒரு பெரியவருடைய சிந்தனைகள். இதைக் கேட்டதும் எல்லோரும் சுயநலவாதியாக மாறுங்கள் என்று கூறுவதாக நினைத்து விடக்கூடாது. சுயநலம் என்ற வார்த்தைக்கு இப்போது நாம் வைத்திருக்கும் அர்த்தம் வேறு.

ஒரு பெரியபங்களா! அதற்கு முன்பாக ஒருவன் பெரிய மியூசிக் பார்ட்டியோடு நின்று கொண்டு **Happy Birthday to you!** என்று பாடிக்கொண்டிருந்தான். "யாருக்காக இப்படி இங்கே நின்று கொண்டு பிறந்தநாள் வாழ்த்து பாடிக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார். அந்த வழியாக வந்த ஒரு வெளியூர் ஆள். "இந்த பங்களாவின் உரிமையாளருக்கு இன்று பிறந்தநாள். அதற்காகத்தான் இப்படிச் செய்கிறேன்" என்றான் அந்த ஆள்.

என்ன இது ?அந்த பெரிய் மனிதனுக்கு கொஞ்சம் கூட மரியாதையே தெரியவில்லை. நீங்கள் இவ்வளவு ஆர்வமாக இங்கே வாழ்த்துப்பாடுகிறீர்கள். அந்த ஆள் ஜன்னலையாவது திறந்து இதைப் பார்த்து ரசிக்க வேண்டாமா? என்றான் வெளியூர் ஆள். இதற்கு அந்த ஆள் விபரம் தெரியாமல் பேசாதே! நானே இரண்டு இடத்தில் எப்படி இருக்க முடியும்? நான்தானே அந்த பெரிய மனிதன் என்றான். தனக்காக வாழ்வதில் இது ஒரு தனிரகம்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தமிழ்மக்கள் அனைவரும் ஒன்று திரண்டால் ஓரிரு நாளில் எதிரியை விரட்டியடிக்கலாம்

## கேணல் பானு

(மட்டக்களப்பு)



எமது படைக்கட்டமைப்பு வலுவாக இருக்கின்றது. நாலாம் கட்டப்போர் திணிக்கப்படுமானால் நமது வான்படையும் தாக்குதலை மேற்கொள்ளும் என விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல பானு தெரிவித்துள்ளார். ஈரளக் குளம் மக்களுக்கான கிராமியப் படைப்பயிற்சி தொடர்பான ஆரம்பக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரைநிகழ்த்துகையில்,

ஸ்ரீலங்கா அரசு எம்மீது யுத்தத்தைத் திணிக்குமாக இருந்தால் அந்த யுத்தத்தில் எவரும் பார்வையாளராக இருக்கக் கூடாது அனைவரும் பங்காளிகளாக மாற வேண்டும்.

சமாதானத்தை இழுதடித்துக் கொண்டு எமது படைப்பலத்தை நலிவடையச் செய்வதே ஸ்ரீலங்கா அரசின் நோக்கமாகும். ஸ்ரீலங்கா அரசு எதனையும் எமக்கு தரப்போவதில்லை. நாம் அடித்துத்தான் பெற வேண்டும். அவ்வாறு அடித்துப் பெற்ற நிலம் தான் எம்மிடம் உள்ளது.

விடுதலைப் போராட்டம் ஆரம்பித்ததில் இருந்து இன்றுவரை எமக்கு பலமாக இருப்பவர்கள் நீங்கள் தான். அதன் அடிப்படையில் இன்றைய அரசியல் சூழலை உங்களுக்கு விளக்க வேண்டியுள்ளது.

இந்தச் சமாதான காலத்தில் இருநூற்றுக்கும் மேற்பட்ட போராளிகளை நாம் இழந்திருக்கின்றோம். ஆயினும் எமது தலைவர் பொறுமையின் விளிமபில் இருக்கின்றார். விடுதலைப் புலிகளைத் தாக்கினால் புலிகள் பொறுத்துக் கொள்வார்கள் தமிழ் மக்களைத் தாக்கினால் தான் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள் என்பதை உணர்ந்த சிங்கள அரசியல்வாதிகள் தமிழ் மக்கள் மீதான படுகொலைகளை செய்யும் அதே வேளை புலிகளே யுத்தத்தை ஆரம்பித்தார்கள் என சர்வதேச சமூகத்திற்குக் காட்டும் வகையில் சூழ்ச்சி களைச் செய்து எம்மை யுத்தத்திற்கு இழுத்து வரு கின்றனா்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சமாதானத்தை ஆரமபிப்போம் எனக் கூறிக் கொண்டு மறு முனையில் ஸ்ரீலங்கா படைபலத்தை விருத்தி செய்து வருகின்றார்.

எமது போராட்டம் ஆயுத பலமின்றிய காலத் தில் உறுதியாக நின்று வளர்ச்சி அடைந்துள் ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 5000 இராணுவத்தினர் மட்டுமே உள்ளனர்.

ஆனால் ஐந்து இலட்சம் மக்கள் உள்ளனர். நாம் அனைவரும் ஒன்று திரண்டால் ஓரிரு நாளில் எதிரிகளை விரட்டி அடித்து எமது மண்ணை மீட்க முடியும். அந்தளவிற்கு எமது இலக்கினை நிறை வேற்றக் கூடிய சிறந்த தலைவரை நாம் பெற்று இருக்கின்றோம்.

சில நாடுகள் தேசியத் தலைவரின் வியூகங்களைக் கண்டு வியந்தும் நிற்கின்றன. அப்படிப்பட்ட எமது தலைவரது காலத்தில் எமது உரிமைகளை வென்றெடுக்க அனைவரும் ஒன்று சேரவேண்டும் என்றார். (த)

## சுற்றிவளைப்புகளைக் கண்டிக்கிறது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்

(கொழும்பு)

மலையகத்தில் தோட்ட பகுதிகளில் பொலிஸாரின் சுற்றிவளைப்பு தேடுதல் சம்பவங்களையும் மலையகத் தமிழர்கள் கைது செய்யப்படுவதையும் வன்மையாக கண்டிப்பதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

மலையகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஊடுருவியுள்ளதாக பொய்யான வதந்திகளைப் பரப்பி விட்டு மலையக தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவதை தமது கட்சி அனுமதிக்காது என இலங்கை தொழிலாளர் காங்கிரசின் உப தலைவர் ஆர்.யோகராஜன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பண்டாரவளை பூணாகலை தோட்டத்தில் கடந்த ஞாயிற்று கிழமை 21 பேர் கைது செய்யப்பட்டமை குறித்தே இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறான பொய்யான வதந்திகளை பரப்பி மலையகத்தில் அமைதியற்ற சூழலை ஏற்படுத்துவதை நாம் ஒரு பொழுதும் அனுமதிக்கப்போவதில்லை எனவும்,

இந்த விடயத்தில் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்துள்ளதுடன் மலையகத்தில் இடம்பெறும் கைதுகளை உடனடியாக நிறுத்துமாறு அரசாங்கத்தை கோரியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## கர்ப்பிணிப்பெண்களுக்கு போஷாக்கு உணவு

(கொழும்பு)

கர்ப்பிணிகள் போசாக்கு மட்டம் குறைவான பின் தங்கிய பிரதேச கர்ப்பிணிப்பெண்களுக்கு போஷாக்கு உணவு வழங்கும் திட்டம் ஒன்று எதிர்வரும் மார்ச் மாதம் முதல் அமுல்படுத்தப்படவுள்ளது.

மஹிந்த சிந்தனைகள் எனும் அடிப்படையிலேயே இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

இதன் முதல்கட்டமாக புத்தளம், அம்பாந்தோட்டை, பதுளை, மொனறாகலை ஆகிய நான்கு மாவட்டங்களில் இருந்து பின்தங்கிய செயலக பிரிவில் அமுல் செய்யப்படவுள்ளது.

இப்போஷாக்கு உணவு வழங்கும் வேலைத் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 5கோடி 40 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (க-2)

## ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்தி ஊடகநிறுவனங்களிற்கும் ஊடகவியலாளர்களுக்கும் பொலிஸார் மற்றும் இராணுவம் இடையூறு விளைவிப்பதை கண்டித்து நாளை மாலை கோட்டை ரயில் நிலையத்திற்குள் முன் ஊடகவியலாளர்களால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடாத்தப்படவுள்ளது.

பாதுகாப்பு தரப்பினர் மூலம் அவசர காலச்சட்டத்தைப பயன்படுத்தி ஊடகவியலாளர்களை கைது செய்தல் இடையூறுகளை விளைவித்தல் மற்றும் ஊடாக நிறுவனங்கள் மீது சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

இது அதிகளவில் தமிழ் ஊடகங்களை இலக்காக வைத்தே மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், ஊடக ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம் ஆகியன இணைந்து விடுத்துள்ள அறிக்கையில தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது தமிழ் ஊடகவியலாளர்கள் அவசரகாலச் சட்டத்தின கீழ் கைது செய்யப்படும்பொழுது பாதுகாப்புப் படையினா் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள அடையாள அடடையை உதாசீனம் செய்து வருகின்றனர்.

யாழ் பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றில் செய்தி சேகரித்துக் கொண்டிருந்த ஊடகவியலாளர்கள் பாதுகாப்புப் படையினரால் தாக்கப்பட்டு காயப்படுத்தப்பட்டனா். அத்துடன் அரசாங்கதினால் வழங்கப்பபட்ட ஆடையாள அட்டையை படையினர் பறித்து வீசியுள்ளளனர்.

அது மட்டுமன்றி அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதியை புகைப்படம் எடுத்து பத்திரிகையில் பிரசுரித்த குற்றச்சாட்டின் பேரில் படப்பிடிப்பாளர் ஒருவர் குற்றப்புலனாய்வுப் பிரிவினா் மூலம விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இத்தகைய செயல்கள் ஊடகச் சுதந்திரத்திற்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கின்றது என்றுள்ளது. (க-7)

## பாதிப்புற்ற வீடுகளை 3 மாதத்திற்குள் புனரமைக்குமாறு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்டு இதுவரை திருத்தப்படாத வீடுகளை இன்னும் 3 மாத காலத்திற்குள் திருத்திக் கொடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் நிர்மாண அபிவிருத்தி நிறுவன அதிகாரிகளுக்கு உத்தரவுவிட்டுள்ளார்.

சுனாமி பேரலையால் கடலோரப் பிரதேசங்களைச் சேர்ந்த 65 ஆயிரத்திற்கும் அதிகமான வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளன.

அத்துடன் பெரும் எண்ணிக்கையான வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## சீன வெடிகள்கொளுத்துவதை தவிர்க்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலையில் சீனவெடிகள் கொளுத்துவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

சிலர் மரணச் சடங்குகளின் போது சீன வெடிகளை கொளுத்துகின்றனர். தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் மக்கள் துப்பாக்கி வேட்டுக்கள் கேட்டதாக எண்ணி பதற்றமடைகின்றனர்.

அத்துடன் எதிர்வரும் சனிக்கிழமை பொங்கல் பண்டிகை கொண்டாடப்படவுள்ள மக்களும் முடிந்தளவு வெடிகள் கொளுத்துவதை தவிர்க்குமாறும் மக்கள் தரப்பில் கேட்கப்பட்டுள்ளது. (க)

# கடற்படைத் தளபதியைக் கொலை செய்யச் சதி? நட்பு நாட்டு உளவுப் பிரிவு இலங்கைக்கு தகவல்

(கொழும்பு)

இராணுவ உயர் அதிகாரியின உதவியுடன் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் வசந்த கரன்ன கொடயைக் கொலைசெய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கைக்கு வெளிநாட்டு உளவுப்பிரிவு தகவல் அளித்துள்ளது என்று கொழும்பின வார பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு அண்மையில் இருக்கும் நட்பு நாட்டின் உளவுப் பிரிவினால் இலங்கையின் பிரதான உளவுப் பிரிவான உளளகப் புலனாய்வுப் பணிப்பாளர் சபைக்கு இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்படைத் தளபதியைப் படுகொலை செய்வதற்கு பாதுகாப்புப் பிரிவின் முக்கிய பிரமுகர் ஊடாக பெண் ஒருவர் தகவல்களைச் சேகரித்து வருகின்றார்.

அந்தப் பெண் புத்தளத்தைச் சேர்ந்தவர். தற்போது பாதுகாப்புப் பிரிவின் உயர் பதவி வகிக்கும இந்த அதிகாரி முன்னர் புததளம் பிரதேசத்தில் இருந்தபோது அந்தப் பெண்ணுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார்.

அடிக்கடி கொழும்பிற்கு வரும இந்தப் பெண்ணை பாதுகாப்பு அதிகாரி சந்தித்து வருகிறார். இது தொடர்பில் கடந்த நவம்பா மாதம் 10ஆம் திகதி இலங்கைக்கு வெளிநாட்டு உளவுப் பிரிவு தகவல அளித்தது.

இரு வாரங்களின் பின் அந்த உளவுப் பிரிவு வழங்கிய தகவலில், இந்தப் பெண் கொழும்பில நடமாடும விடுதலைப்புலி உறுப்பினருடன் நேரடித் தொடர்புகளை வைத திருப்பதாகவும் கூறியுள்ளது.

அரச கூட்டுத தாபனத்தில ராஜன் எனும பெயருடன் நடமாடும் அந்த விடுதலைப்புலி உறுப்பினருக்கு இந்தப் பெண் தகவல்களை வழங்குவதாகவும், அந்தத் தகவல்கள் விடுதலைப்புலிகளுககு அளிககப்பட்டு வருவதாகவும் வெளிநாட்டு உளவுப் பிரிவுத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

வெளிநாட்டு உளவுப் பிரிவின அறிக்கையை ஆராய்ந்த இலங்கையின் உள்ளக புலனாய்வு பணிப்பாளர் சபை இது தொடாபில அரசாங்கத்திற்கு அறிக்கை சமர்பபித்துள்ளது.

அதன் பிரதிகள் இலங்கை கடறபடைத் தளபதிக்கும் இலங்கை பொலிஸ் மா அதிபருக்கும் அனுப்பியுள்ளது என்று அந்த வார இறுதப் பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. (க- 4,8)

## திருகோணமலையில்
# மீன்பிடி நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன

(திருகோணமலை)

திருகோணமலை கடற்பிரதேசத்தில் மீன்பிடி நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

கிழக்குப் பிரதேச கடற்பரப்பில் பாதுகாப்பு எல்லைப்பிரிவில் முன்னர் கடைப்பிடிக்கபபடடு வந்த சட்டதிட்டங்கள் தொடாபாக மீனவர்களுக்கு மீண்டும் அறிவுறுததுவதற்கு கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

பாதுகாப்பு கடற்பிரதேச எல்லைக்கு ஏற்ப கோணேஸ்வர பிரதேசத்திலிருந்து திருகோணமலைத துறைமுகத்திற்கான பிரவேசப் பகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கடற்பிரதேசம் ஆகியவறறில் மீன்பிடி நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

யுத்த நிறுத்த உடன்படிக்கை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு முன்னரே பாதுகாப்பு எல்லைப் பிரிவு தொடர்பான சட்டதிட்டங்கள் அமுலுக்கு கொண்டுவரப் பட்டது.

கடற்படையினரின் மற்றும் திருகோணமலைத் துறைமுகத்தின் பாதுகாப்பை உறுதிபபடுததும் நோக்கிலேயே இந்தச் சட்ட திட்டங்களை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். (க-7)

### மினி பஸ் பயணிகள் கவலை

அச்ச உணர்வுடன் மக்கள் நடமாடும் இன்றைய சூழ்நிலையில் முண்டியடித்துக் கொண்டு மினி பஸ்களில் பிரயாணம் செயயும் போது மினிபஸ்களில் பலத்த சப்தத்துடன் சினிமாப் பாட்டுக்கள் போடப்படுவதால் பயணிகள் பஸ் நடத்துநருடனோ, பஸ் நடததுனர் பஸ் டிரைவருடனோ பேச முடியாத நிலை நிலவுவதால் பயணிகள பெரும் கஷ்டத்துக்கு உள்ளாவதாக மினி பஸ் பயணிகள் தெரிவிக்கின்றனர். (து)

### திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள தொலைபேசி வர்த்தக நிலையம் ஒன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு தொலைபேசி உதிரிப்பாகங்கள், தொலைபேசிகள், பணம் என்பன திருட்டுப் போயுளளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-132,133)

## தொழில்நுட்ப பாடங்களைப் போதிக்கும்
# பல்கலைக்கழக நிர்மாணப் பணிகள் இவ்வாண்டிற்குள் பூர்த்தியாகுமாம்

(கொழும்பு)

தொழில்நுட்பப் பாடங்களைப் போதிக்கும் பல்கலைக்கழகத்தை நிர்மாணிக்கும் பணிகள் இவ்வாண்டிற்குள் பூர்த்தியாகும் என தொழிற்பயிற்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் பல்கலைக்கழகம் கொழும்பு இரத்மலானைப் பிரதேசத்தில் அமையவிருப்பதாகவும் இதற்காக அரசாங்கம் 6 கோடி ரூபாவை ஒதுக்கி இருப்பதாகவும் அமைச்சர் பியசேனகமகே தெரிவித்துள்ளார்.

அதன் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு 13 கோடி ரூபா வரையான தொகை செலவாகும்.

இதனை ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜப்பான, கொரிய அரசுகள் ஆகியவற்றின் ஊடாகப் பெற்றுக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொழில் கல்வியை மேம்படுத்துவதில் அதிக அக்கறை காட்டுகிறார்.

அவரது கொள்கைக்கு ஏற்ப தொழில்நுட்பப் பாடங்களைப் போதிக்கும பல்கலைககழகம் நிறுவப்படுகிறது.

இந்தப் பல்கலைக்கழகத்தில் தொழிற் கல்வியைப் பெறக்கூடிய எல்லைகளை விஸ்தரிப்பதற்கு அமைச்சு நடவடிக்கை எடுததுள்ளது எனவும அமைச்சர் பியசேன கமகே மேலும் தெரிவித்தார். (க-7)


-யாழ்ப்பாணம் – மாநகரசபை

**சந்தைகள், இறைச்சிக்கடைகள், குத்தகைக்கு விடுவதற்கான**

**மீள்கேள்வி அறிவித்தல் - 2006**

கீழ்க்காணப்படும் சந்தைகள், இறைச்சிக்கடைகளை 20.01.2006 – 31.12.2006 வரையான ஒருவருட காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்கான மீள்கேள்வி கோரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| படிவக்கட்டணம் | - | ரூபா 300/- (வற்வரி நீங்கலாக) |
| கேள்விப்படிவம் வழங்கும் இறுதித் திகதி | - | 17.01.2006 (ந.ப. 2.00 மணி) |
| கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி | - | 17.01.2006 (பி.ப. 2.00 மணி) |
| கேள்வி திறக்கப்படும் நேரம் | - | 17.01.2006 (பி.ப. 3.00 மணி) |

| இறைச்சிக்கடைகள் | மீளளிக்கக்கூடிய பிணைப்பணம் | சபையால் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை |
|---|---|---|
| நாவாந்துறை மா.இ.கடை இல.2 | 2500/- | 113000/- |
| நாவாந்துறை மா.இ.கடை இல.4 | 2500/- | 60000/- |
| நாவாந்துறை மா.இ.கடை இல.5 | 2500/- | 40000/- |
| நாவாந்துறை மா.இ.கடை இல.6 | 2500/- | 25000/- |
| நாவாந்துறை மா.இ.கடை இல.8 | 2500/- | 10000/- |
| நாவாந்துறை மா.இ.கடை இல.9 | 2500/- | 10000/- |
| நாவாந்துறை மா.இ.கடை இல.10 | 2500/- | 6800/- |
| நாவாந்துறை மா.இ.கடை இல.11 | 2500/- | 3900/- |
| நாவாந்துறை மா.இ.கடை இல.12 | 2500/- | 3900/- |

வாகனத்தரிப்பிட அறவீடு
(படிவக் கட்டணம்500/- 75/- 5000/- 500000/-)

நடைபாதை அங்காடி
(படிவக் கட்டணம் 300/- (வற்வரி நீங்கலாக) - 5000/- 1000000/-)

மேலதிக விபரம் தேவைப்படின் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சீ.வி.கே.சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(C -119A)


# சட்ட திட்டங்கள் அறிமுகம்

(கொழும்பு)

கூட்டுறவு இயக்கத்தை திறந்த பொருளாதார சந்தையில் போட்டியிடக்கூடியதாக மாற்றும் நோக்கிலான சட்டதிட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இது தொடர்பான நகல் சட்டமூலம் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் அந்த ஆவணம் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படும என்றும கூட்டுறவு அபிவிருததி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கையின் பல பாகங்களிலும் 14ஆயிரம் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்குகின்றன.

அவற்றில் கடன் வழங்கும் அமைப்புக்களும் அடங்கும். பலவேறு நெருக்கடிகளுக்கு உள்ளாகி இருக்கும் 306 கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன என்றும் ஆணையாளர் மேலும் சுட்டிக்காடடினார்.

கூட்டுறவு இயக்கம் தொடர்பான தேசிய கொள்கையை வகுக்கும் நடைமுறையும் அமுலாகிறது.

சாவதேச தராதரங்களுக்கு அமைவாக வகுக்கப்படும் கொள்கைகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம கிடைத்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். (த-7)

# நிர்வாக சேவைக்கு மேலும் 49 பேர்

(கொழும்பு)

தரம் 01 இலங்கை கல்வி நிருவாக சேவைக்கு மேலும் 49 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பல வருடங்களுக்கு பின்பு இப்பதவியுயர்வை கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த வழங்கினார்.

தரம் 02இல் இருந்த 49 பேருக்கு இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதில் 24 அதிகாரிகளே சேவையில் உள்ளனர். மிகுதி 25 பேரும் ஓய்வு பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேசமயம், கல்வி நிர்வாக சேவை தரம் 01இல் 200 வெற்றிடங்கள் உள்ளதாகவும் அதனை நிரப்புமாறும் தமிழர் ஆசிரியர் சங்கம் குரல் எழுப்பி வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-2)




கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பதினைந்து சிறுவர் கழகங்கள் இணைந்து வெளியிடும் 'தேடும் சிட்டுக்கள்' நூல் வெளியீட்டு விழாவில் சுகவாழ்வு நிறுவன பணிப்பாளர் அருட்தந்தை எஸ்.டேமியன் தலைமையுரை நிகழ்த்துவதையும் மற்றும் நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களையும் படத்தில் காணலாம்.

*(படம்: நல்லூர் செய்தியாளர்)*

# தரம் - 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

இல: 01 ஆக்கம்: மூ.விக்னேஸ்வரன் (அதிபர்)
யா.உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை


வினாத்தாள் - 1 நேரம்: 45 நிமிடம்

**01. கீழே ஒரு பந்தி தரப்பட்டுள்ளது. அதை வாசித்து 1-5 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

குமாரசாமியின் மகன் ஆரூரன். கஸ்தூரியும் காவேரியும் அவனது சகோதரிகளாவர். கஸ்தூரியின் மகன் ஐங்கரன். ஆரூரன் தரம் 5 இல் கற்கிறான். ஐங்கரன் 2001 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 10ஆம் திகதி பிறந்தான்.


01. ஐங்கரன் ஆரூரனின் (தம்பி, மருமகன், அண்ணன்)
02. கஸ்தூரி ஆரூரனின் (கூறமுடியாது, தங்கை, அக்கா)
03. குமாரசாமியின்.மனைவி (றஞ்சினி, மாலினி, கூறமுடியாது)
04. ஐங்கரனின் முதலாவது பிறந்தநாள் (17.08.2002, 16.08.2002, 16.08.2003)
05. ஆரூரன் புலமைப் பரிசில் பரீட்சை எடுக்கும் ஆண்டு (2001, 2003, கூறமுடியாது)

**02. 6-8 வரையான படங்கள் ஏதோ ஒரு வகையில் பொருத்தமானவை, ஒன்று வேறுபட்டது அதன் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக.**

06.

(1) (2) (3)

07.

(1) (2) (3)

08.

(1) (2) (3)

**03. 9-12 வரையான வினாக்களில் தரப்பட்ட மூன்று சம்பவங்களுள் ஒன்று பொருத்தமற்றது. அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக**


09. தபாற் கந்தோர்
1) பணம் சேமிப்புச் செய்யலாம்
2) முத்திரை வாங்கலாம்
3)அடகு வைக்கலாம் -----

10. அரசினா் வைத்தியசாலை
1) பணத்துக்கு மருந்து வாங்கலாம்
2)தங்கியிருந்து சிகிச்சை பெறலாம்
3) ஊசி போடலாம் -----

11.இ.போ.ச. பேரூந்து நிலையம்
1) பயணத்தை ஆரம்பிக்கலாம்
2) சுற்றுலா செல்லலாம்
3) பஸ் வரும்வரை தங்கி நிற்கலாம். -----

12. கடற்கரை
1)மீன் பிடிப்பார்கள்
2)சிறுவர்கள் விளையாடுவார்கள்
3)சிப்பி, சோகி பொறுக்குவார்கள் -----

13. பின்வரும் வரை படத்துக்கான சரியான விடையைச் சுற்றிக் கட்டமிடுக.




1) காற்று கிழக்கிலிருந்து மேற்காக வீசுகிறது
2) காற்று மேற்கிலிருந்து கிழக்காக வீசுகிறது
3) காற்று வீசவில்லை -----

**04. தரப்பட்ட பந்தியை வாசித்து (14 - 18) வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.**

வியாபாரி ஒருவன் தனது கண்ணாடி அலுமாரியில் அழகுக்காக பிஸ்கட் பெட்டிகளை அடுக்கிவைத்திருந்தான். முதல் வரிசையில் 12 பெட்டிகளும் அதன் பின்னுள்ள ஒவ்வொரு வரிசையிலும் இரு பெட்டிகள் வீதம் குறைத்தும் அடுக்கி கடைசி வரிசையில் இரு பெட்டிகளை வைத்தான்.

14. அவன் அடுக்கிய பெட்டிகளின் எண்ணிக்கை ........................
15.அவன் அடுக்கிய வரிசைகளின் எண்ணிக்கை ........................
16.ஒரு பெட்டியை 40 ரூபாவாக விற்றால் கிடைக்கும் மொத்தப் பணம் ..................
17.ஒரு பெட்டியை 35 ரூபாவாக வாங்கினால் கொடுத்த பணம் ........................
18.அவனுக்குக் கிடைக்கும் இலாபம் ........................


**05. ஒழுக்கின்றிக் கிடக்கும் வாக்கியத்தை ஒழுங்குபடுத்தி எழுதுக.**


19. பாட்டு / பின்பு / கொடுக்கும் / கனிவு / நல்ல
20.மரத்தில் / வாழ்ந்தன / அந்த / கூடு / பறவைகள் / கட்டி


**06. 21 - 14 வரையான வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள படங்களுடன் தொடர்புடைய மூன்று சொற்களைக்கொண்ட விடையின் கீழ்க் கோடிடுக.**

21.


1) மரம், பிஞ்சு, காய்
2) செடி, பிஞ்சு, காய்
3) கொடி, பிஞ்சு, காய்


22.

1) பனி, வெயில், மழை
2)மழை, குளிர், வெயில்
3) ஆடம்பரம், வெயில், மழை


23.

1) ஒளி, ஒலி, வெளிச்சம்
2) ஒளி, வெளிச்சம், பிரகாசம்
3) ஒழி, பிரகாசம், ஒலி

24.

1) காற்று, நூல், வால்
2)காற்று, முச்சை, கடதாசி
3) பசை, கடதாசி, நூல்

**07. 25 தொடக்கம் 27 வரையான வினாக்களுக்கு முதல் இரு உருக்களுக்கு இடையேயான தொடர்பினை அவதானித்து மூன்றாவது உருவிலுள்ள வெற்றிடங்களை நிரப்புக.**

25.



26.



27.



**08. கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து 28-32 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

ஒமான் மாமா வந்தாராம்
எனக்கொரு ரெலிவிசன் தந்தாராம்
ஆமாம் நாமும் கதை கேட்டு
அழகிய படங்கள் பார்த்திடுவோம்

28.ரெலிவிசன் என்பதன் தமிழ் வடிவம் என்ன?
------------------------------------------------
29.மாமா எங்கிருந்து வந்தார்?
------------------------------------------------
30.கதை கேட்பவர் யார்?
------------------------------------------------
31.உமக்குத் தெரிந்த ஒளிபரப்பு நிலையங்கள் இரண்டு எழுதுக?
1.------------------------- 2.-------------------------
32.இப் பாடலில் வரும் பன்மைச் சொற்கள் இரண்டு தருக?
1.------------------------- 2.-------------------------

**09. கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

33. கலாவின் வயது 9 ஆயின் அவளது தங்கை ரம்யாவின் வயது 5 ஆகும். ரம்யாவின் வயது 9 ஆகும்போது கலாவின் வயது.
(1)10 (2)13 (3)14

34. ஒரு நிரையில் 7 பிளாஸ்ரிக் கதிரைகளும் 11 மரக்கதிரைகளும் அடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறான மூன்று நிரையில் எத்தனை கதிரைகள் அடுக்கப்பட்டுள்ளன.
(1)21 (2)54 (3)33

(0 ஆம் பக்கம் பார்க்க...)

# காயமடைந்த சிப்பாய் மரணமானார்

(திருகோணமலை)

திருகோணமலை மைனாத்தீவுப் பகுதியில் இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார்.

மைனாத்தீவில் ஞாயிற்றுக்கிழமை இரவு சுற்றுக்காவல் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில் பலாங்கொடவைச் சேர்ந்த றஞ்சித் குமார (வயது 22) சிப்பாய் கொல்லப்பட்டார். அவர் தலையில் காயங்களுடன் திருகோணமலை மருத்துமனையில் அனுமதிகப்பட்டார்.

அவரது உடல் மூதூர் மருத்துவமனை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலை மேற்கொண்ட ஒருவர் இராணுவத்தினர் திருப்பித் தாக்கியதில் சுட்டுக்கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் தானியங்கி துப்பாக்கி ஒன்று சம்பவ இடத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது. (க)

# பரீட்சைப் பெறுபேறுகள் மார்ச் முற்பகுதியில் வெளியாகும்

(கொழும்பு)

க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் மார்ச் மாதம் முதல் இரு வாரங்களுக்குள் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சையில் இரசாயனப் பாட வினாத்தாள் தொடர்பாக பிரச்சினை எழுந்த போதிலும் அது சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளை எந்த விதத்திலும் பாதிக்கமாட்டாது என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரசிங்க தெரிவித்துள்ளார். (க)

# கொலைச் சந்தேக நபர்கள் இருவரையும் விடுதலை செய்வதா?

## சட்டமா அதிபரே தீர்மானிப்பார்

(கொழும்பு)

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் குறித்து நடவடிக்கைகளை மேற்கொள்ள சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

தற்பொழுது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கைகளை சட்டமா அதிபரிடம் வழங்க கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தீர்மானித்துள்ளனர்.

இதற்கமைய சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைவாக தடுத்து வைக்கப்பட்டுள்ள 2 சந்தேகநபர்களையும் வடுதலை செய்வதா? பிணையில் விடுவிப்பதா? என்பது தொடர்பாக தீர்மானிக்கப்படவுள்ளது. (க-7)


## 2ஆவது ஆண்டு நிறைவு விழா

(ஊர்காவற்றுறை)


ஊர்காவற்றுறை புனித - மரியாயின் சேனையின் பரலோக இராக்கினி பிரசீடியத்தின் 2 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 27ஆம் திகதி. வெள்ளிக்கிழமை பங்குத்தந்தை அருட்திரு ஜேமிஸ் அடிகள் தலைமையில் நடைபெறவுள்ளது. (த-72)

(0 ஆம் பக்கத் தொடர்ச்சி...)


35. ஒரு மரத்தில் 15 குருவிகள் இருந்தன. அதில் 3 குருவிகளைச் சுட்டால் மிகுதி எத்தனை?
(1)12 (2)3 (3)0


36. 
படத்திலுள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை?
(1)12 (2)8 (3)15

10. வினாக்களுக்கு அடுத்து வரும் உருவின் கீழ்க் கோடிடுக.

37. 


38. M: W எனின் P: 1) q 2) d 3) b

39. 


40. 


## 5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள் - 01

மாணவர் முழுப்பெயர் : ..............................

பாடசாலையின் பெயர் : ..............................


வீட்டின் முகவரி : ..............................

மாணவர்களே! உங்கள் விடைகளை 18.01.2006 இற்கு முன் அனுப்பிவைக்கவும். உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

**வலம்புரி**
கல்விப்பகுதி,
வினாத்தாள் இல - 01
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

குறிப்பு :- மாணவர்களின் நலன்கருதி இவ வினாத்தாள்களை வைத்துக்கொண்டு, வினாகளுக்கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களை சரியாகக் குறிபபிடவும். பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.

# மானுடம் போற்றும் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்



மறைந்த பின்னாலும் மக்கள் மனதுள்
மறுபிறப் பெடுக்கும் 'மாபெரும் மானுடன்!'
இருக்கின்றபோதே 'இறக்கின்ற' பலருள்
இறந்த பின்னாலும் 'இருக்கின்ற' 'புனிதன்'!
அன்னவன் மண்ணிலே அவதரித்த ஆண்டோ
'ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினாறாகும்!'
ஆங்கிலத் 'தை'யின் அரும் 'பதினொன்றே' அவ்
ஆதவன் உதித்த அரும்பெரும் நாளாம்!
வறுமையில் பிறந்து வறுமையில் உழன்று
வறுமையைச் சுமந்து
வாழ்ந்தவர் கோடி! வாழ்பவர் கோடி!
உயர்ந்தவர், உயர்பவர் ஒரு நூறு பேரே!
அதிலும் 'தனிப்பெரும் ஆளுமை' கொண்டே
மானுடம் போற்ற மாநிலம் தழைக்க
'ஊனுயிர்' எடுத்தவர் ஒரு சில பேரே!
ஒரு சில பேருள் 'மக்கள் திலகம்'
தனித்துயர்ந்திட்ட 'தகைமையாளான்'!
'பிறருக்கு உதவுதல் பிறவிப் பெருங்குணம்'!
'இல்லார்க்கு ஈவோன் இறைவனுக்கு நிகராம்'
செப்பு மொழிகளைச் செயல்படிவாக்கச்
சிந்தையில் உறைந்த 'சீரிய கலைஞன்',
'எம்.ஜி.ஆர்' என்னும் 'ஏழைகள் தலைவன்'!
கண்டியில் உதித்த அக் 'கதிரவக் கலைஞன்'
திரைப்படவானின் திசையெலாம் ஒளிர்ந்தவன்!
ஈழத்தமிழரின் இன்னல் தீர
வாரிக் கொடுத்த 'வள்ளல் பெருமகன்'!
தனித்துவம் பேணும் 'தமிழ்ப் புலிப்படையின்'
மகத்துவம் உணர்ந்தே மதிப்பளித்தவனாய்
'தம்பி'யின் இயக்கம் தழைத்திட,
வாரி நம்பிக்கையுடனே
'நன்கொடை தந்தோன்'!
'அரசியல்', 'சினிமா' இரண்டிலும் நன்றாய்
'அதிரடி' நடத்திய 'ஆற்றலின் சிகரம்'!
ஆட்சியைப் பிடித்து அரியணை ஏறி
மும்முறை தொடராய் 'முதல்வர் மகுடம்'
'தன் தலை சூடிய தலைமையின் உச்சம்'!
படித்துக் கிழித்துப் பட்டங்குவித்தோர்
பண்ணிடமுடியாப் பயன்தரும் பணிகளைச்
செய்தே காட்டிய 'செயற்றிறன் வல்லோன்'!
அன்னவன் மறைந்தே ஆண்டுகள் பலபல
போயினும் அந்தப் 'பொன்மனம்' கொண்ட
'தாயினும் இனியன்' எம் 'தமிழ் மொழிக் காதலன்'
'மதுரையில் தமிழுக்கு மாநாடு' கண்டதும்;
'மலையாளி அல்லன் யான்
மறத்தமிழன்' என்றதும்
இருந்தவரையினில் எவர்க்கும் பணியாத
ஆளுமைத் திறனால் 'அறுவடை' கொண்டதும்
அள்ளிக் கொடுப்பதில் அருஞ்சுகம் கண்டதால்
அனைவரின் உளமும் 'அவன்' வசமானதும்
நேற்றுப் போலெம் நினைவுத் திரையில்
நிழலாய் விரிந்தே நெஞ்சை நனைக்கும்!
மாற்றமே இன்றி மறுபடி மறுபடி, அம்
'மன்னவன் பெயரே' மாநிலத் தமிழரின்
'மந்திரம்' ஆகி, 'மறை' போல் முழங்கும்!!!

ஜெ.கி.ஜெயசீலன்.

# கடற்கரையில் கரையொதுங்கிய வீடு போன்ற விசித்திர உருவம்



காரைநகர் மருதபுரம் கடற்கரையில் அண்மையில் கரையொதுங்கிய வீடு போன்ற அழகிய பொருளைப் படத்தில் காணலாம். *(படம்: காரைநகர் செய்தியாளர்)*

காரைநகர் மருதபுர கடற்கரையில் விசித்திரமான வீடு போன்ற உருவம் கரையொதுங்கியுள்ளது. இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சுமார் 20 சதுர வடிவான அளவில் கமுகம மரங்கள் மூலம் பாதைப்படகு செய்யப்பட்டு அதன் மேல் இவ் உருவம் மிதக்க விடப்பட்டு கடலினுள் விடப்பட்டுள்ளதாக மருதபுர மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு சுனாமியால் இறந்தவர்களின் ஞாபகமாகவோ அல்லது இறுதிக் கிரிகைக்காக தயாரிக்கப்பட்டு கடலில் மிதக்கவிட்டிருக்கலாம் என்றும் பெரும்பாலும் இந்தியா அல்லது சுமாத்திரா தீவுகளில் இருந்து விடப்பட்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பல்லாயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இவ் உருவில் சிலுவை காணப்படுவதுடன அதனுள் வீடு போன்ற உருவம் அமைக்கப்பட்டு மெழுகுதிரி, தலையணை போன்ற சிறியளவான பொருட்களும் காணபபட்டன.

மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்ட இப்பொருள் மரத்தினாலும் தகரத்தினாலும் செய்யப்பட்டு வர்ணம் பூசப்பட்டுள்ளது.

கரையொதுங்கிய இப்பொருளை மருதபுரம் கடற்றொழிலாளர்கள் எடுத்து மருதபுரம் கிராம அபிவிருத்திச் சங்க வளவினுள் வைத்துள்ளனர். (க-246)

# மூன்றாம் நிலைக்கல்வி முறைகள் நவீனமயப்படுத்தப்படும்

(கொழும்பு)

இந்த வருடத்தின் ஆரம்ப மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி முறைகள் நவீனமயப்படுத்தப்படும் என்று கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான திட்டங்களில் ஆரம்ப வகுப்புக்களில் போதனா மொழிகளை மேம்படுத்தல் மாணவர்களின் ஆங்கில தகவல் தொழில்நுட்ப அறிவை விருத்தி செய்வது போன்றவை முக்கியத்துவம் பெறவுள்ளது.

அத்துடன், முதலாம் வகுப்பிலிருந்து தமிழ், சிங்களம் ஆகியவற்றை இரண்டாவது மொழியாகப் போதிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆறாம் வகுப்பிலிருந்து ஒன்பதாம் வகுப்பு வரையிலும் பொதுவான பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கும் பத்தாம் வகுப்பிலிருந்து பதின்மூன்றாம் வகுப்பு வரையிலான பாடத்திட்டங்களை திருத்தியமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

க.பொ.த. உயர்தர வகுப்பிற்கான பாடத்திட்டங்களில் தொழில்நுட்பப் பாடங்களை அறிமுகப்படுத்துவது தொடர்பாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (க-7)

## நியமனத்தை புதுப்பிக்கலாம்

தென்மராட்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் பகுதிநேரம் ஆங்கிலம் கற்பிக்கும் ஆங்கில ஆசிரியர்கள் 2006 ஆம் ஆண்டுக்கான தமது நியமனத்தை புதுப்பித்துக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதற்கான விண்ணப்பத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்றும், எதிர்வரும் 13ஆம் திகதிக்கு முன் அவற்றை வலயக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (த-108)

# நாம் தனித்துவிடப்படவில்லை...

**நம்மை நோக்கி அவலமும் துன்பமும் விரைந்து வருகின்றமையால் எதிர்கொள்ள தாயாராவோம்- நாம் தனித்துவிடப்படவில்லை. தென் அமெரிக்க நாடுகளைப் போல் எழுவோம் என்று தமிழீழ மக்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் நமபிக்கை அழைப்பு விடுத்துள்ளனர்.**

புலிகளின் குரல் வானொலியில் கடந்த சனிக்கிழமை "சேர்பியா, பொஸ்னியாவைப்போல் சர்வதேச நீதிமன்றக் கூண்டில் விரைவில் சிறிலங்கா" என்ற தலைப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் கா.வே.பாலகுமாரன் ஆற்றிய உரையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

உரையின் தொகுப்பு வருமாறு,

சர்வதேச நீதிமன்றில் குற்றவாளிகளாக நிறுத்தப்பட்டிருக்கும் சேர்பியாவின் முன்னாள் ஜனாதிபதி மிலோசவிக், பொஸ்னியாவில் கொடூரமான மிலேச்சத்தனமான படுகொலைகளுக்கு உத்திரவிட்ட கொடூர மிலேச்சத்தனமான இராணுவத் தளபதி இன்னமும் தேடப்பட்டுக கொண்டிருக்கும் ராட்கோ மிலேடிக் போன்றோர் வரிசையில் இலங்கையில் இடம்பெறக்கூடிய அரசியல் இராணுவத் தலைமைகள் பற்றியும் நாம் பேசவுள்ளோம்.

சாமியே சரணம் ஐப்பா என்று இந்தியாவுக்கு காவடி எடுத்துவிட்டு அது பயனளிககாத நிலையில் மஹிந்தவால் அமெரிக்காவுக்கு அனுப்பிவைக்கப்பட்ட மங்கள என்று சொல்லக்கூடிய அமங்களமான ஒருவடைய வாய் வார்த்தைகள் பற்றியும் அவரது அமெரிக்க செயற்பாடு பற்றியும் சொல்ல உள்ளோம்.

எவருடைய நலனுக்கும் இருப்புக்கும் கேடுவிளைவிக்காமல் எங்களுடைய நலன்களை முன்னிறுத்தி எங்களுடைய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க விரும்புகிறோம் என்பதுதான் எங்களின் செய்தி.

நாங்கள் தேவையற்ற எதிர்ப்புகளை இராஜதந்திர வழிகளூடாக மென்மைப்படுத்தி எங்களது விடுதலைப் பாதையை நாங்கள் வேகப்படுத்த முயலுகிறேமே அல்லாமல் எந்தவிதமான சர்வதேச மற்றும் இந்திய அரசியலில் எதிலும் தலையிடாமல் நாங்கள் செல்லும் புதிய பாதையில் எங்களைச் செல்ல விடுங்கள என்பதுதான் எங்களது கருத்து.

பயங்கரவாதம் என்ற சொல் இன்று உலகத்தைப் பிடித்து பேயாக ஆட்டிக்கொண்டு இருக்கிறது. இம்முறை மாவீரர் நாளில் தலைவர் தெளிவான ஒரு கருத்தை முன்வைத்து இருந்தார். "பயங்கரவாதம் என்ற சொறபதத்துக்கு தெளிவான வரைவிலக்கணம் இல்லாததால் தர்மத்தின் வழியில் நடத்தப்படுகிற நியாயமான அரசியல் போராட்டங்களும் பயங்கரவாதமாக திரிபுபடுத்தப்படுகின்றன.

இந்தவகையில் இனவாத ஒடுக்குமுறைகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து போராடும் சுதந்திர இயக்கங்களுக்கும் பயங்கரவாதசேறு பூசப்படுகிறது. பயங்கரவாதத்துக்கு எதிரான இன்றைய சர்வதேச எதிர்ப்பியக்கத்தில் அடக்குமுறைக்கு அரசுகளின் இராணுவப் பயங்கரவாதம் மூடி மறைக்கப்படுகிறது. ஆயினும் அந்த அரச பயங்கரவாதத்தை எதிர்த்து நிறபவர் மீதே பயங்கரவாத முத்திரை குத்தப்படுகிறது. இந்தத் துர்ப்பாக்கிய நிலைதான் எமது விடுதலை இயக்கத்திற்கும் ஏறபட்டிருக்கிறது" என்று தலைவர் கூறியிருந்த கருத்தின் விளைவை சொல்ல விரும்புகிறேன். அணமைக்காலத்தில் உலகத்திலே இந்தக் கருத்துகள் உக்கிரமாக அடிபட்டுக்கொண்டிருக்கின்றன.

இந்த வகையில் தென் அமெரிக்காவிலே ஏற்பட்டிருக்கிற புதிய மாற்றங்களை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். 2005ஆம் ஆண்டு யூன் மாதம கியுபாவிலே உள்ள ஹவானாவின் மாநாட்டு மண்டபத்தில் 700க்கும்மேற்பட்ட அறிஞர்கள், ஆய்வாளர்கள் எல்லாம கூடி இருந்தார்கள். அந்த இடத்தில லத்தீன் அமெரிக்காவில் அரச பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட அனைத்துத் தரப்பும் தங்களுடைய சானறுகளை முன்வைத்து எது பயங்கரவாதம் என்று பேசினார்கள்.

அங்கே முக்கியமாகச் சொல்லப்பட்டக் கருத்து என்னவென்று சொன்னால், அரச பயங்கரவாதத்துக்கு எதிராக ஒரு மக்கள் ஐக்கிய முன்னணி ஒன்றை கட்டி இருக்கிறார்கள் என்ற செய்தியை நாங்கள் அறிந்தோம் அந்த முன்னணி இன்று தீவிரமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

யார் பயங்கரவாதி என்ற கருத்தை அந்த முன்னணிக்கு ஊடாக நாம் அறியலாம். நீங்கள் கேள்விப்பட்டிப்பீர்கள்.. லத்தீன் அமெரிக்காவின் பின்லேடன் என்று சொல்லப்படக்கூடிய ஒரு மிகப் பெரிய பயங்கரவாதியை இன்று அமெரிக்கா தன்னுடைய நகரங்களிலே வைத்திருப்பதாகச் செய்திகள் வெளிவந்திருக்கின்றன.

வெனிசூலாவில் பல பயங்கரவாதச் செயல்களைச் செய்து அங்கிருந்து தப்பியோடி அமெரிக்காவல் இன்று இருக்கக்கூடிய அந்தப் பயங்கரவாதியை தங்கள் நாட்டுக்குத் தருமாறு வெனிசூலா அதிபர் அமெரிக்காவைக் கேட்டிருக்கின்றாா. அவர் பெயர் லூயிஸ் பொசடா கர்லஸ்.

பின்லேடன் 1976ஆம் ஆண்டு ஒகடோபர் மாதம் கியூபாவின் விமானம் ஒன்றை குண்டு வைத்துத் தகர்த்து 73பொதுமக்களின் சாவுக்குக் காரணமாக இருந்தவர். யார் பயங்கரவாதி என்று தோலுரிக்கிற கனி ஒன்று உலகத்திலே நடைபெற்றுக்கொணடிருக்கின்றது. அதை நாங்கள் கவனத்திலே கொள்கிறோம்.

அந்த வகையில் இந்தத் தொடர்பாடல் துறையும் வல்லாண்மை சக்திகளால் திரிபுபடுத்தப்பட்டுக் கொண்டிருப்பதை நாங்கள் பார்க்கிறோம். எங்களுடைய விடுதலைப் போராட்டம் மிக நீண்டகாலமாக உரிய இடத்தை அடையாமல் இருப்பதற்கு இந்தத் தடைகளே காரணமாக இருந்தது.

இன்று தென் அமெரிக்காவில் டெலி சவுத் என்று சொல்லக்கூடிய தெற்குப் பகுதிகளைச் சேர்ந்த நாடுகளினுடைய ஒரு அணியாக ஆர்ஜென்ரீனா, கியூபா, வெனிசூலா போன்ற நாடுகள் தங்களுக்கான தொலைக்காட்சியை அதாவது தென் அமெரிக்காவின் சி.என்.என். என்று சொல்லக்கூடியதை உருவாக்கி இருக்கிறார்கள். இதை புதிய செய்தியாக நாம் பார்க்கிறோம். இந்த அணியில் கியூபா வெனிசூலா, அர்ஜென்ரினா இறுதியாக பொலிவியா சேர்ந்திருக்கிறது. பொலிவியா பற்றி ஒரு சில விடயங்கள் சொல்லலாம் என்று நினைக்கின்றேன்.

பொலிவியாவின் வரலாறு ஒரு அதிசயமான வரலாறு. மூன்றில் இரண்டு பகுதி மக்கள் செவ்விந்திய மக்கள். அவர்கள் நீண்டகாலமாக அடிமைப்பட்ட நிலையே வாழ்நதார்கள். 70 வீதமான மக்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழ்ந்தார்கள். ஒரு குறிப்பிட்ட நபர்களின் கைகளில் சிக்கி எண்ணெய் வளமெல்லாம் அவர்களின் நலனுக்காகவே பயன்படுத்தப்பட்டன.

இவைதவிர இன்று தென் அமெரிக்காவின் 12 நாடுகளிலே பாரிய அரசியல் மாற்றங்கள் நடைபெற்றுக்கொண்டுவருவதை உலகம் கவனித்துக்கொண்டு வருகிறது. தோதல் ஊடாகவே மாற்றங்களைச் செய்கிறார்கள். எந்த வகையிலும் பயங்கரவாதச் செயல் என்று அமெரிக்கா சொல்ல முடியாதவகையில் தேர்தல் ஊடாக மாற்றங்களைச் செய்து வருகிறார்கள்.யூவோ மார்ஸ் என்று சொல்லக் கூடிய இன்றுகூட வாடகை வீட்டு அறையில் வாழ்கின்ற எந்தவிதமான வங்கிக் கணக்கும் இல்லாத ஒரு சாதாரணமான செவ்விந்திய மனிதர் இன்று பதவிக்கு வந்திருக்கிறார். தென் அமெரிக்காவில் 200 வருடத்துக்குப் பின்னர் வந்திருக்கக கூடிய ஒரு செவ்விந்திய ஜனாதிபதி என்று அவர் அழைக்கப்படுகிறார்.

அவர் சார்ந்த அயமாரா என்ற குடியினுடைய கொள்ளைகளை அவர் முன்னால் வைத்துப் பேசுகிறபோது எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அவர் 'என்னுடைய கோட்பாடு திருடக் கூடாது, பொய் சொல்லக் கூடாது, சோம்பி இருக்கக்கூடாது, அதேவேளை அடிமையாக இருக்கக் கூடாது' எனற கருத்தை முன் வைத்திருக்கிறார்.

வெனிசூலா, கியூபா, பொலிவியா நாடுகளுக்கு ஊடாக ஒரு புதிய கீழைத்தேய தென் அமெரிக்க நாடுகளுக்கான ஒரு புதிய அணியை அவர் உருவாக்கிக் கொண்டு வருகிறார். அவர் எவருக்கும் எதிராக என்று இல்லாவிட்டாலும் தங்கள் நாடு, தங்கள் வளங்கள் தங்களுக்கு உரியது என்ற அடிப்படையிலே உருவாகி வருகிறார்.

## தென் அமெரிக்க நாடுகளைப் போல் எழுவோம்

வெனிசூலாவில் 1998ஆம் ஆண்டிலிருந்து மிகப் பெரிய புரட்சியே நடந்துகொண்டு வருகிறது. அங்கே ஒரு சாதாரண இராணுவ உத்தியோகத்தராக இருந்து ஜனாதிபதியாகப் பதவியேறற சாவோசினுடைய நடவடிக்கைகள் மிகப்பெரிய எழுச்சியை உலகம் முழுக்க உருவாக்கி இருக்கின்றன.

உலத்திலே மிகக்கூடிய எண்ணெய வளங்களைக்கொண்ட நாடு மிக அற்புதமாக அந்த எண்ணெய் வளத்தை தமது வறுமையான மக்களுககாக அந்த எண்ணெய் வளத்தின் பணத்தை முழுமையாக ஒதுக்கீடு செய்து மிக அற்புதமாக ஒரு பொருண்மியத்தை அவர் உருவாக்கிக்கொண்டு வருகிறாா.

ஏழை நாடுகளுக்கு எண்ணெய்யை அவர் குறைந்த விலையில் விற்பதற்குக்கூட முன்வந்திருக்கிறார் எனபதை நாம் கவனத்தில்கொள்ள வேண்டும். கியூபாவுக்கு எண்ணெயை மிகக் குறைந்த விலைக்கு விற்றுக்கொண்டு வருகிறார். இப்படியாக அந்த நாடுகள் எல்லாவற்றையும் அரவணைத்துச் செல்லக்கூடிய ஒரு நாடாக இன்று வெனிசூலா மாறியிருக்கிறது.

கியூபாப் புரட்சி நடந்தது 1959 ஆம ஆண்டு. தொடக்கத்திலே அந்தப் புரட்சியை நசுக்குவதற்கு இராணுவ ரீதியாக பல்வேறு முயற்சிகள் எடுப்பட்டு பே ஓர் பிக்ஸ் என்று சொல்லக்கூடிய அந்த வளைகுடா படையெடுப்புக்குப் பின்னால் இராணுவ ரீதியான செயற்பாடுகள் தோற்றதற்குப் பின்னால் பொருண்மிய ரீதியான முற்றுகை ஒன்று இடப்பட்டு பல்வேறு வகையிலே சொல்லப்படமுடியாத தாக்குதல்களை மேற்கொண்டு இலககுகள் பொருண்மிய ரீதியாக அடையாளம் காணப்பட்டு 40வருட காலமாக- உலகததிலே மிக நீண்ட பொருண்மிய முற்றுகைக்குள்ளே அகப்பட்ட கியூபா நாடு, இன்று மெல்ல மெல்ல தலைநிமிர்ந்து ஒரு காலத்திலே சுய தேசிய உற்பத்தியைக்கொண்டிருநத நாடு இன்றைக்கு 7 விழுக்காடு அளவிற்கு வருட உற்பத்தி வளர்ந்திருப்பதை நாங்கள் பார்க்கிறோம்.

கியூபா எங்களுக்கு ஒரு பாடமாக இருக்கிற நாளை நாங்கள் விடுதலை பெற்றாலும்கூட தொடக்கத்திலே எங்களுக்கு இப்படிப்பட்ட சில தடைகள் வரக்கூடும். இவற்றைத தாண்டுவதற்காக வெறுமனே ஆர்வம் மாத்திரமல்லாமல் ஆக்கபூர்வமாகச் செயற்படக்கூடிய அணியே உலகத்தில் இருப்பதை நாங்கள் பார்க்கிறோம் இது எங்களுக்கு ஒரு மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியாக இருக்கிறது.

கியூபாவின் வளர்ச்சியைப் பார்க்கும்போது எங்களுக்கு அதிசயமாக இருக்கிறது. கியூபாவில் ஒரு அற்புதமான மக்கள் நலன் சார்ந்த பொருண்மியக் கட்டமைப்பை உருவாக்கி இருக்கிறார்கள். தங்களது வரவு-செலவுத் திட்டத்திலே கிட்டத்தட்ட 68 விழுக்காட்டுக்கு மேல் கல்வி, சுகாதாரம், சமூக நலன் மற்றும் விஞ்ஞான நலன்களுக்காக ஒதுக்குகிறார்கள்.

அதனுடைய விளைவாக உலகததிலே இன்றைக்கு மிகச் சிறந்த ஆரோக்கியம் மிகுந்த ஒரு அற்புதமான மருத்துவத்துறை கியூபாவிலே இருப்பதை உலகம் முழுமைக்கும் ஏற்றுக்கொள்ளவார்கள். 165 பேருக்கு ஒரு வைத்தியர் என்ற அளவிலே கியூபாவில் இன்றைய நிலை இருக்கிறது. ஏறத்தாழ 12 ஆயிரம் விஞ்ஞானிகள் அவர்களிலே 15 விழுக்காடு கலாநிதிப்பட்டம் பெறறவர்கள். 210 ஆய்வு நிறுவனங்கள் ஏறத்தாழ 30ஆயிரத்துக்கும் மேலானோர் அங்கே பணி செய்கிறாா கள் என எண்ணிப்பாருங்கள்.

அதைவிட முக்கியமானது உலகத்திலேயே மிகவும் இறப்பு விகிதம் குறைந்த சிறுவர் இறப்பு விகிதம் 6.2 விழுக்காடு உடைய அந்த நிலையும் ஆயுள் நிலை வாழ்நிலை எதிர்பார்ப்பு 76ஆகவும் உளள நாடாக கியூபா இருக்கிறது. இலங்கையில் கூட 73ஆக இருக்கிறது. இப்படியாக கியூபாவில் புதிய அணியை உருவாக்கி புரட்சியை நடத்தி அற்புதமாக ஒரு மாறறு அணியை உருவாக்கிக் கொண்டு செயற்பட்டுக்கொண்டு வருகிறார்கள்.

பொலிவியாவைப் பொறுத்தவரையில் ஒரு முக்கிய செய்தி போராளிகள், பொதுமக்களுக்கு உள்ளது. 1967ஆம் ஆண்டு ஒக்டோபர் 9ஆம் நாள்தான் கொலைக் குழுக்களால் சே கொல்லப்பட்டார். இந்த உலகத்திலே நாங்கள் இப்போது தனித்துவிடப்படவில்லை. எங்களுடைய அற்புதமான அன்புக்குரிய பொதுமக்கள் ஒன்றை சிந்திகக வேண்டும் நாங்கள் தனித்துவிடப்படவில்லை. உலகமே தன்னுடைய வாழ்வுக்காகவும் இருப்புக்காகவும் போராடிக்கொண்டு இருக்கிறது.

அங்கே புதிய புதிய அணிகள் உருவாகிக் கொண்டு இருக்கினறன. நாளை நாங்களும் விடுதலை பெற்றுச் செயற்படும்போது எங்களுக்கு உதவ கரங்களைக் கொடுப்பதற்கு எங்கள் மனங்களைத் தொடுவதற்கு எங்கள் பசியைத் தீர்ப்பதற்கு நாடுகள் உலகிலே உள்ளன.

நாங்கள் எந்த அரசியலும் பேசவில்லை. வாழ்வின் இருப்புக்காக வரலாற்றை எங்களின் மக்களுக்காக நாம் முன்வைக்கிறோமே அல்லாமல் வேறு எந்த வகையான அரசியலும் இந்த இடத்திலே இங்கே இல்லை என்பதை தெளிவாகச் சொல்லிக்கொள்கிறோம்.

அதேவேளையில் இன்னொரு முக்கிய செய்தியை இங்கே சொல்ல வேண்டும். அண்மையிலே இந்தியாவுககுப் பயணம் செய்து அங்கே உறங்கிக்கிடந்த தமிழ் மக்களின் உணர்வைத தட்டிவிட்ட பணியைத தவிர வேறு எதையும் மஹிந்த செய்யவில்லை. அது தோல்வியில் முடிந்ததுக்குப் பின்னால் அடுத்த கடட நடவடிக்கையாக மப்பு பிடித்த மந்திமரத்துக்கு மரம் தாவுவது போல- இப்போது அவர் தான் போகவில்லை. ஏனென்றால் இவர் போனால வரவேற்க அங்கே யாரும் தயாராக இல்லை.

இவரைச் சந்திப்பதற்கு புஷ் தயாராக இருப்பார் என்று நான் நம்பவில்லை. தன்னுடைய வெளிநாட்டு அமைச்சர் என்று சொல்லக் கூடிய ஒரு கத்துக்குட்டி அமைச்சர் வெளிநாடு என்றால் என்னவென்று அரசியல் ரீதியாக இராஜதந்திர ரீதியாக எந்தவிதமான அனுபவமும் அற்ற-உள்நாட்டிலே கீழ்நிலை அரசியல் நடத்தி அந்த செல்வாக்கின் பயனாக வெளிநாட்டு அமைச்சராக நியமிக்கப்பட்ட மஙகள சமரவீரவை, அமெரிக்காவுக்கு அனுப்பி அங்கே அவர் கடந்த சில நாள்களாக திருவாய் மலர்ந்து பல செய்திகளைச் சொல்லிக்கொண்டு வருகிறார்.

அந்தச் செய்திகளைக் கேட்கிறபோது எங்களுடைய இரத்தம் கொதிக்கிறது என்று சொல்லவில்லை. எங்களுடைய மனங்களிலே மிகப்பெரிய சோகமும் மிகப்பெரிய சினமும் கிளர்ந்தெழுகின்றன. மங்கள சமரவீர-முக்கியமாக அமெரிககாவில் உள்ள புலனாய்வு அமைப்புகளையும், பயங்கரவாத எதிர்ப்பு இயக்கங்களையும் பல்வேறு இயக்கங்களையும் சந்தித்தது மடடுமல்லாமல் அவர் அண்மையில் "வாஷிங்டன் போஸ்ட்" பத்திரிகைக்கும மிகப்பெரிய செய்தி ஒன்றை அளித்திருக்கிறார்கள்.

2 நாடகளுக்கு முன்னர் மங்கள சமரவீர சொல்லியிருக்கும் கருத்துகளை எங்கள் மக்களின் கவனத்துக்குக்கொண்டு வரவிரும்புகிறேன். "நவீன பயங்கரவாத உலகத்தின் தந்தையாக" எமது விடுதலைப் போராட்டத்தை மங்கள சமரவீர வர்ணித்திருக்கிறார். அதைப்போல் "மிகக் கொடிய கொலைகார பொருள் முறை அமைப்பைக்கொண்ட அல் கொய்தா அமைப்பைவிட மிக பாரதூரமான ஒரு இயக்கம்" என்று அமெரிக்காவில் போய் சொல்லி கோள் மூட்டுகிற வேலையைப் பார்த்து இருக்கிறார்.

எஙகளைப் பற்றி பேச்சு நடத்தி தீர்வுகாண வேண்டிய நிலையில் உள்ள ஒரு அரசாங்கம் சொல்லக் கூடிய இறுதி செய்தியாக இருக்கிறது. இதுதான் உண்மையான செய்தி என்பதையும் எங்கள் மக்களின் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன். இதைவிட மங்கள அமெரிக்காவில் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், எங்களுக்குத் தேத்தண்ணி தந்தால் போதாது ஆதரவு தந்தால் காணாது நாங்கள பயங்கரவாதிகளை அழிப்பதறகான நடவடிக்கைகளை நீங்கள் செய்ய வேண்டும்" என்று கூறியிருக்கிறாா.

அங்கே என்ன நடந்தது என்பது பற்றி எங்களுக்குத் தெரியாவிட்டாலும் கூட இப்போது சில செய்திகளை நாங்கள் சொல்லிக்கொள்ள விரும்புகிறோம்.

எங்கள் மக்களின் வாழ்வும் இருப்பும் தொடர்பான முக்கியமான செய்தி என்று நினைக்கிறேன். இந்தச் செய்தியை மக்கள் முன்னிலையில் தெளிவாக வைப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அணமைக்காலமாக எங்கள் பகுதிகளில கொலைகள் அரங்கேறிக் கொண்டு வருகின்றன. முககியமாக இளைய தலைமுறை அறிவாளர்கள் குறி பார்த்து இலக்கு வைக்கப்படுகிறார்கள். இந்தத் தேசத்தினது குருத்துகளைக் கருக்குவதிலே மிகத் தெளிவாகத் திட்ட மிட்டு நடப்பதை நாங்கள் பார்க்கிறோம். இந்த மாதிரியான செயற்பாடுகளுக்குக் காரணமாக இருக்கக்கூடிய கொலைக் குழுக்கள் பற்றி உலகத்திலே மிக சோகமான அவலமான வரலாறு ஒன்று இருக்கிறது.

தென் அமெரிக்க நாடுகளிலே குறிப்பாக கொலம்பியா, வெனிசூலா, சிலி, கியூபா போன்ற நாடுகளிலே 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளிலே அமெரிக்க சி.ஐ.ஏ.வின் துணையோடு அமெரிக்க இராணுவ நிலைகளிலே பயிற்றுவிக்கப்பட்ட கொலைக்குழுக்களின் தோற்றங்களைப் பற்றி நாங்கள் அறிந்திருக்கிறோம். வரலாற்றிலே அண்மைக்காலமாக சி.ஐ.ஏ.வின் இரகசியக் கோப்புகள் யாவும அமெரிக்காவிலே வெளியிடப்பட்டு பல்வேறு செய்திகள் பகிரங்கமாகப்பட்டிருக்கின்றன. நாங்கள் ஏதோ கண்டு பிடித்த செய்திகள் அல்ல.

உதாரணமாக 70ஆம் ஆண்டுகளில் கொண்டோர் பிளான் என்று சொல்லக்கூடிய கேசிங்கரின் அடிப்படையில் தென் அமெரிக்காவில் உள்ள அரசியல் செயறபாட்டாளர்களைக் கொல்வதற்கான பாரிய திட்டம் ஒன்று குழுக்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்ட வரலாற்றை நாங்கள் இங்கே நினைவுபடுத்திக் கொள்கிறோம். அந்த வரலாற்றை அமெரிக்கா இப்போது கைவிட்டதாக நாங்கள் நம்பிக்கொண்டு இருக்கிறோம். இப்போது மங்கள சமரவீர அங்கே போய் பேசிக் கொணடிருக்கும் வேளையில்,

எங்கள் மண்ணிலே கொலைக் குழுக்களினது கைங்கர்யங்கள் அரங்கேறிக் கொண்டு இருக்கின்றன. இந்தக் கைங்கர்யங்களை தொடர்ந்து நிகழ்த்த நாங்கள் அனுமதிக்கமாட்டோம் என்ற அந்த நிலையிலேயும் ஒரு காலகட்டத்தில் சமூக நீதியைக் கதைக்கிற இந்த உலகம் நிச்சயமாக இந்த கொலைகாரக் குழுக்களைச் செயறபடுத்தி அனுமதித் திருக்கக்கூடிய சரத பொன்சேகா அல்லது மஹிந்த ராஜபக்ஷ போன்றவர்களையும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் தோற்றுவித்து சிறைப்பிடித்து விசாரிக்கப்படவேண்டிய கட்டததுக்கு தள்ளப்படப் போகிறார்கள் என்பதையும் அமெரிக்கா நன்கு உணர்ந்திருக்கும் என்பதை நாங்கள் அறிவோம்.

எனவே, நாங்கள் தனித்துவிடப்படவில்லை. ஆனால் எங்களை நோக்கி அவலமும் துன்பமும் விரைந்து வருகின்றமையால் அதை எதிர்கொளவதற்கு நாம்தயாராக வேண்டும் என்ற அடிப்படையில் நாங்கள் சேகு வேராவையும் பிடல் காஸ்ட்ரோவையும் இங்கே நினைவுப்படுத்திக் கொள்கிறோம். ஆகவே நீடித்து நிற்கும் விடுதலைப் போராட்டத்துக்கு உதவிகள் தாமாக வந்து சேரும் என்பதைத்தான் இன்று நாம் முக்கிய செய்தியாக கூறுகிறோம என்றார் கா.வே.பால குமாரன். (க)

# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்

# சுயசரிதை

15 மீள்பார்வை



சகோதரி பத்மாவதியுடன்

### வீடு திரும்பினேன்

டி.எஸ்.என்: வீட்டை விட்டு நீங்கள் புறப்பட்டு வந்து குறைந்தது ஐந்து வருடங்களாகியிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. இதன்பின் எப்போது வீட்டிற்குத் திரும்பிப் பெற்றோர்களை சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது?

சிவாஜி: ஆமாம்... அப்போது எனக்குப் பன்னிரண்டு வயது இருக்கும். கோயம்புத்தூரில் இருந்து எங்களது முகாம் பொள்ளாச்சிக்கு மாறிவிட்டது. அப்பொழுது எம். ஆர். ராதா அண்ணன் நடிக்கும் நிறைய நாடகங்கள் அங்கு நல்ல விதமாக நடந்தன. இருந்தாலும் சில நேரங்களில் வறுமையில் இருந்து மிகவும் கஷ்டப்படவும் செய்தோம்.

அங்கிருந்தபொழுது நான் நீண்ட நாட்களுக்குப் பிறகு அரும்பாடுபட்டு தீபாவளிக்காவது என்னை ஊருக்கு அனுப்பி வையுங்கள் என்று கெஞ்சிக் கேட்டேன் .அவர்களும் பெரியமனது வைத்து என்னையும் சங்கிலியாண்ட புரத்தைச் சேர்ந்த என்னுடைய நண்பன் தங்கவேலுவையும் ஊருக்கு அனுப்பி வைத்தார்கள்.

நாங்கள் இருவரும் திருச்சி வந்து சேர்ந்தோம். முதலில் நான் இறந்துபோனதாக எனது தாயாரும் தந்தையும் நினைத்துக்கொண்டிருந்தார்கள். பிறகு நான் உயிரோடு இருப்பதைத் தெரிந்துகொண்ட பிறகும் அவர்களால் என்னைப் பார்க்க முடியவில்லை. அவர்களை இப்போது காணப்போகிறோம் என்று எண்ணியதும் மெய்சிலிர்த்தது. வீட்டுக்கு வந்தவுடன் நான் முதலில் பார்த்தது என் தங்கை பத்மாவதியையும் என் தம்பி சண்முகத்தையும்தான். இரண்டு பேரும் பெரியவர்களாக இருந்தார்கள். நான் அவர்களை அதற்கு முன் பார்த்ததில்லை. அவர்களுக்கு முன்னால் இருந்த எனது இரு மூத்த சகோதரர்களும் இறந்தது எனக்குத் தெரியும். ஆனால் பத்மாவதி சண்முகம் இருவரையும் அவர்கள் பிறந்தது முதல் எனக்குத் தெரியாது. அப்பா ஜெயிலில் இருந்து வந்த பிறகு பிறந்தவர்கள் அவர்கள். எனவே அவர்களை அன்றுதான் முதன் முதலில் பார்க்கிறேன். என் அண்ணன் தங்கவேலுவையும் பார்த்தேன்அந்த நேரத்தில் எனது மனோநிலையும் என் தாயினுடைய மனோநிலையும் எப்படியிருந்திருக்கும்?



தம்பி சண்முகம், சிவாஜி கணேசன் அண்ணன் தங்கவேலு

வீட்டை விட்டுச் சென்ற பிள்ளை பல வருடம் கழித்து திரும்பி வருவதும் அவன் வருவதற்கு முன்னால் சம்பாதித்து தாயைக் காப்பாற்றக்கூடிய பிள்ளைகள் இருவரும் இறந்துபோனதும் புதிதாகப் பிறந்த பிள்ளைகளை மற்றொரு பிள்ளை பல வருஷங்கள் கழித்து சந்திக்க நேர்வதும் அவர்களுக்கு அப்போது எப்படி இருந்திருக்கும்? பாருங்கள். நானும் எனது அம்மாவும் நீண்ட நேரம் கட்டிப்பிடித்துக் கொண்டு அழுதிருக்கிறோம்.அதற்கு பிறகு சமாதானமாகி அந்த தீபாவளியைக் கொண்டாடினோம்.

அப்போது எனக்கு எனது தம்பி தங்கை இருவரையும் பார்த்தது தான் மிகப் பெரிய தீபாவளியாக இருந்தது.அப்படியே வீட்டிலேயே இருந்துவிடலாம் என்று நினைத் தேன். நானும் என்னுடைய நண்பன் தங்கவேலுவும் நாடகக்கம் பெனிக்குச் செல்லாமல் சில நாட்கள் இருந்தோம்.



ஒரு நாள் நாங்கள் இருவரும் வீட்டில் உட் கார்ந்து பேசிக்கொண்டி ருந்தோம் .அப்போது ஜல்.ஜல் என்று குதிரை வண்டிச் சத்தம் கேட்டது. முன்பெல்லாம் அதை ஜட்கா வண்டி என்று கூறு வார்கள். அந்த வண்டியில் வந்தது எம்.ஆர். ராதா அண்ணன். அவர் எங்கள் வீட்டின் முன் இறங் கினார். எனக்கு மிகவும் ஆச்சரியமாகி விட்டது.

ராதா அண்ணன் வண்டியை அனுப்பிவிட்டு ஒரு சின்னப் பெட்டியை எடுத்துக்கொண்டு எங் களது வீட்டிற்குள் வந்து எங்களுடன் தங்கப்போவ தாகச் சொன்னார். நான் ஒரு நாள் கழித்து அவரைக் கேட்டேன் என்னண்ணே விசேஷம்? என்ன சமாச்சாரம்? என்று.

இல்லையடா நான் பொன்னுசாமிப்பிள்ளை கம்பெனியிலிருந்து விலகிவிட்டேன் .நான் புதிய தாக ஒரு நாடகக் கம்பெனி ஆரம்பிக்கலாம் என்றிருக்கிறேன் .அதில் நீயும் சேரவேண்டும் என்றார். எனக்கு மிகவும் கஷ்டமாகி விட்டது. ஏனென்றால் எனக்குச் சோறு கொடுத்து தொழில் கற்றுக் கொடுத்த என்னுடைய வாத்தியாரெல்லாம் பழைய கம்பெனியில் இருக்கிறார்கள். அவர்களை யெல்லாம் எப்படி விட்டுவிட்டு வருவது என்று எனக்குப் பயமாகவும் குழப்பமாகவும் ஆகிவிட்டது. இருந்தாலும் ராதா அண்ணன் மேல் எனக்கு நம்பிக்கையும் மரியாதையும் இருந்தது. அதனால் மறுபடியும் ராதா அண்ணன் அவர்கள் நமக்கு ஒரு நல்ல வாய்ப்பை ஏற் படுத்திக்கொடுப்பார் என்கிற நம்பிக்கையுடன் அவருடன் செல்வதற்கு ஒப்புக்கொண்டேன். அதன்பின் அம்மாவிடம் அனுமதி கேட்டேன்.அம்மா, ஏம்பா பழைய கம்பெனியை விட்டுவிட்டு போகிறாயே உனக்கு பரவாயில்லையா? என்று கேட்டார்கள்.

பரவாயில்லையம்மா நான் ராதா அண்ணனை நம்புகிறேன். அண்ணன் ஏதாவதொரு நல்லது நமக்குச் செய்வார் என்றேன். அப்பொழுது ராதா அண்ணன் நான் மெட்ராஸுக்கு பையன்களை கூட்டிக்கொண்டு போகி றேன். நான் கண்டிப்பாகப் பிள்ளைகளுக்கு நாடகக் கம்பெனியில் நல்ல எதிர்காலம் ஏற் படுத்திக்கொடுப்பேன் என்று எங்களது பெற்றோர்களிடம் கூறிவிட்டு என்னையும் எனது நண்பன் தங்கவேலுவையும் அழைத்துக்கொண்டு மெட்ராஸ் வந்தார். அப்பொழுதுதான் நான் முதன்முதலில் மெட்ராஸைப் பார்த்தேன். (தொடரும்)

# உள்ளூராட்சி சபைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்

(கொழும்பு)

நாட்டில் உள்ளூராட்சி சபைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவுள்ளது. தற்போது 311ஆக இருக்கும் உள்ளூராட்சி சபைகளின் எண்ணிக்கை 330 ஆக அதிகரிக்கப்படவுள்ளது.

இதன் பிரகாரம் புதிய மாகாணசபைகளுக்கும் மாநகர சபைகளுக்கும் 14 புதிய பிரதேச சபைகளும் ஏற்படுத்தப்படும்.

மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இது பற்றித் தெரிவிக்கையில், அமைச்சு மேற்கொண்ட மதிப்பீடு ஒன்றின் மூலம் தெரிவித்துள்ள பல அம்சங்களின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறினார்.

அதிகரித்து வரும் சனத்தொகை சில பகுதிகளில் வருமான அதிகரிப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான தேவை என்பன இந்த அம்சங்களில் அடங்கும்

எதிர்வரும் உள்ளூராட்சித்தேர்தலில் இந்த புதிய உள்ளூராட்சி சபைகளுக்கும் மக்கள் பிரதி நிதிகளை நியமிக்கவிருப்பதாகவும் அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (க-39)

# அரச ஊழியர்களுக்கு வீடுகள்

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கு வீடுகளை வழங்கும் திட்டத்தை தேசிய வீடமைப்பு அதிகார சபை ஆரம்பித்துள்ளது. இதற்காக இந்த ஆண்டில் 2ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அவற்றின் கட்டுமானப் பணிகள் அடுத்தமாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இது தொடர்பான திட்டத்தின் கீழ் கொழும்பு உள்ளிட்ட சன நெருக்கம்மிக்க பிரதேசங்களில் 4 வீடமைப்புத் திட்டங்கள் அமுல் செய்யப்படும் என அதிகார சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மஹிந்த சிந்தனைகள் கொள்கைப் பிரகடனத்திற்கு அமைய இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-7)

# மரக்கிளையிலே சடலம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சரசாலை தெற்குப் பகுதியில் மரக்கிளையில் தொங்கிய நிலையில் நபர் ஒருவரின் சடலம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மீட்கப்பட்டுள்ளது. குறித்த நபரின் சடலம் அவரது வீட்டிலுள்ள மரக்கிளை ஒன்றில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

அதேயிடத்தைச்சேர்ந்த கந்தையா கிருஷ்ணானந்தன் வயது 48 என்ற நபரே தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டார். கொலையா தற்கொலையா என்று தெரியாத நிலையில் சடலம் மருத்துவப் பரிசோதனையின் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (து-108,8)





நேற்றுக்காலை வண்ணை ஸ்ரீவேங்கடேசவரதராஜப் பெருமாள் கோவிலில் இடம்பெற்ற மாணிக்கவாசகம் நூல் வெளியீட்டு விழாவில் முதல் பிரதியை பிரம்மஸ்ரீ சந்திரஸ்ரீபதி குருக்கள் பெற்றுக் கொள்வதையும் நூலை ஆக்கிய க.மாணிக்கவாசகர் நன்றியுரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.ரீ. ராஜா)

# புத்தாண்டுப் பலன்கள் உங்களுக்கு எப்படி?

## பன்னிரு இராசிகளுக்கும் ஜூன் மாதத்துக்குரிய பலன்கள்

(தொடர்ச்சி....)

| | | | |
|---|---|---|---|
| ரா | சு | சூ | பு |
| | ஜூன் ராசி நிலை | | செ சந் சனி |
| சு சந் | | | |
| | | குரு | கே |

### மேடம்
(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1)

இம்மாத ஆரம்பம் ஜன்மத்து சுக்ரன், 2இல் சூரியன் சொல்லுக்கு பலமாக்கும். புதன் ஆட்சி புகைந்து கொண்டிருக்கும் உறவினர் பிரச்சினைகள் வெளியாகிவிடும். கண்டச் சனியின் கவலையை விட்டுவிட வேண்டும். எந்த வேலையும் குறித்தபடி நிறைவேற்ற முடியாமல் இருக்கும். அரசியல்வாதிகளுக்கு அவசரப் பிரச்சினைகள் இருந்தும் நிறைவேற்றுவதில் காலதாமதமாகும். கான்ட்ராக்ட் தொழில் செய்பவர்களுக்கு குறிப்பாக நல்ல மாதமல்ல. தொழில் வகையில் நட்டத்தையே உண்டாக்கும். பெண்களிடம் மனக்கசப்பு உண்டாகும். இயந்திர கருவிகள் செலவு முக்கியம். பிரயாணம் அடிக்கடி ஏற்க உள்ளது. கடிதம் நல்ல தகவலைக் கொண்டு வரும். இந்த ராசிப் பெண்களுக்கு கல்வி, கேள்வி தேர்வில் வெற்றியும், உத்தியோகம் ஏற்பது போன்ற நன்மையும் இருக்கிறது. குழந்தைகள் சீதளத்தால் பாதிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. சுப விஷயம் குறித்த பிராணம் செல்வதால் தரிசனம் போன்றவையும் முக்கிய நிகழ்ச்சியாக இருக்கும். பிறர் தன் மீது கூறும் குறைபாடுகள் மிக்கதாக இருக்கும். இதனால் மற்றவர்களுடன் வாக்குவாதம் மனபேதமும் நிகழும். உங்கள் செயலில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். உங்கள் எழுத்து பேச்சுக்களோ உங்களுக்கு எதிரியாக அமையக்கூடும். குறிப்பாக பெண்கள்தான் அதிக கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும். நீங்கள் எதை நினைக்கிறீர்களோ அது உடனே செயல்படுத்த முடியாது. வாக்குறுதி கொடுத்து சிக்கலில் மாட்டிக்கொள்ள வேண்டாம். புது வழக்கு தோன்ற வாய்ப்பு இருக்கிறது. குழந்தைகள் குடும்ப வகைக்கு ஆடை அணிகலன் செலவு நெருக்கடியில் பூர்த்தி செய்யப்படும். மாணவ, மாணவிகள் சற்றுக்கவனமாக படிக்க வேண்டும். தொழில் வழி முயற்சி மூன்றாவது மனிதர்கள் உறவினர்களும் பாராட்டாமல் இருக்க மாட்டார்கள். தொழில் வழி தனம் சம்பந்தமான கடிதத் தொடர்பு இனிமையான சூழ்நிலையை உருவாக்கும். கலைப்பிரிவு ஆண், பெண்களுக்கு புதிய தொழில் வழி ஆதாயங்களும் இப்போது இருக்கின்றன. புதுமனை புகுதல், கட்டட சேர்க்கையும் சிலருக்கு குறிப்பிட்ட நன்மைகளாகும். மாணவ, மாணவிகளுக்கு கல்வியில் சிறப்புத் தன்மை இருக்கிறது. உங்களுக்கு கிரகங்களின் சாதகமான போக்கு தெளிவான வழியில் செல்வீர்கள் என்பதைக் காட்டுகிறது. பழைய கடன் விஷயத்தில் கவனத்தை செலுத்தவேண்டிய காலமிது. மாணவ, மாணவிகளுக்கு கல்வி பெருமை தரும். பயம் வேண்டாம். நல்ல ஆரோக்கியம் உடையவர்கள்தான் என்றாலும் இப்போது மிகமிக கவனமாக பார்க்கவேண்டும். குறிப்பாக கர்ப்பிணிகள் எச்சரிக்கை எடுக்கவேண்டும். குடும்பத்து வேலைகள் மகிழ்ச்சிக்குரிய அளவில் வேகமாக இருக்கும். தாமதப்பட்ட காரியங்களில் தன வரவும் இருக்கும்.

### ரிஷபம்
(2,3,4 கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம் 1, 2)

ஆரம்பம் ஜன்மத்து சூரியன் புதன் ஆட்சி செவ்வாயுடன் சனி சேர்ந்து தைரிய இல்லத்தில் வக்ரம் பெற்ற குரு 6இல் மறைந்தான் என்பதால் கொடுக்கல் வாங்கலில் நிதான போக்குதான் இருக்கும். முன்பு விட்டு வைத்த வேலைகளை செய்வதில் உங்கள் கவனம் இருக்கும். பெண்கள் புது உடைகள் வாங்குவது, ஆபரண வழியில் செலவு செய்வது போன்ற நன்மையைப் பெறுவர். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு இடமாறுதல் இல்லை என்றாலும் இலாகா மாற்றம் உண்டாக்கும். போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வழிகள் நன்றாக இருக்கின்றன. வெளியூர் பிரயாணம் அடிக்கடி இருக்கம். சத்ருக்கள் நேர்முக வழி உங்களை ஒன்றும் செய்யாது. மறைமுக வழியில் நீங்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். சிலர் வாகனம் வாங்குவது, வாகன வழியில் நீங்கள் ஏற்பட்ட வழக்குகளை சாதகமாக்கிக் கொள்வது போன்ற நன்மைகள் உண்டு. இந்த ராசி கலைப்பிரிவு ஆண், பெண்களுக்கு நம்பிக்கை தரும் நன்மைகள் உண்டு. காதல் கல்யாண முயற்சி, ஆபரணம் வாங்குவது, இரகசிய கடிதம் எழுவதும் ஆகும். இயந்திரத் தொழில் வாகனம் வைத்து தொழில் நடத்துகிறவர்களுக்கு பிற்பகுதியில் எடுத்த காரியமெல்லாம் வெற்றி வேகமான போக்கும் இருக்கும். அரசியல்வாதிகளுக்கு பிரச்சினைகள் மாத ஆரம்பத்திலிருந்தே விட்டு விட்டு இருக்கும். குழந்தைகள் வகை சீதள பாதிப்பு மருத்துவச் செலவுகளும் உண்டாகும். வார்த்தையோடு இருந்த காரியங்கள் சில நடைமுறைக்கு வந்துவிடும். புது நட்பு, புகழ்மாலையும் கிடைக்கும். விரோதியும் விரைந்து வந்து உங்களுக்கு நன்மை புரிபவர்களாக இருப்பர். தொழில்வேகம் மிக்கவர்களாக இருப்பர். தூரத்து கடிதம் வருவதும், தொழில் வகைக்கு ஆதாயம் உடையதாக இருக்கும். வழக்கும் கடனும் விலகியே இருக்கும். வரவேண்டிய பணமும் உரிய காலத்தே வந்து சேரும். குடும்பத்து உறவினர் எவரேனும் பாதிக்கப்பட்டு துக்க செய்தியும் வரக்கூடும். கணவன், மனைவி உறவு சீரான போக்கு உடையதாக இருக்கும். புத்திரர் புத்திரியர் கல்வி உயர்வு பாராட்டுக்குரியதே. செய்யும் தொழிலில் கவனம் செலுத்தவேண்டும். எழுத்து மூலம் எதிர்பார்த்த நன்மைகளும் நெருங்கி வரவேற்கச் செய்யும். காலம் கடந்தது என விட்டவைகள் சில புதுமை பலம் அடையவும் வாய்ப்பு இருக்கிறது. கடன் விஷயத்திலும் கவனம் செலுத்தவும். வழக்கு தள்ளிக்கொண்டே போகும். இத்தனைக்கும் காரணம் ஓர் அளவு ஏழரை சனியின் பாதிப்புதான் காரணம் என்பது உண்மை. அவை முழுமையாக விபத்து போன்றவைகளையும் கொடுக்க வாய்ப்பு உள்ளது. மனத்திடத்தோடு செயல்படும்போது இடை இடையே நன்மைகளையும் அனுபவிக்கத்தான் செய்கிறீர்கள். சனியும் சாரமும் ஒன்றுசேர்வதால் குடும்பத்தில் சிக்கல் ஏற்படும்.

### மிதுனம்
(மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3)

இது பாதகத்து சனி பயப்படவேண்டாம். பெரியதாக எதையும் செய்துவிடாது என்றாலும் சிறு சிறு பிரச்சினைகள் இல்லாமல் இல்லை. வேலைகள் மகிழ்ச்சிக்குரிய அளவில் வேகமாக இருக்கும். தாமதப்பட்ட காரியங்களில் தன வரவும் இருக்கும். சுப விசேடத்தை பூர்த்தியாக்க நீங்களும் உங்களைச் சேர்ந்தவர்களும் அலைச்சல் உடையவர்களே. தொழில் வழியில் அலைச்சலை அதிகமாக்கும். வேலையாட்கள் வேண்டாத சூழ்நிலையில் இயங்குவதால் தனம் கொடுக்கல் வாங்கலும் பாதிக்கச் செய்யும். மேலும் இப்போது தன்னிச்சையாக எதிலும் செயல்பட முடியாத நிலை இருக்கும். கூட்டு தொழில் இருப்பவர்களுக்கு இது வழக்கு போலவும் இருக்கும். நண்பர்கள் சிலர் இப்போது உங்களை விட்டு விலகி இருப்பதும் குறிப்பிடத்தக்கது. நாகரிக வாகனம் மூலமாகவும் வழக்கு உண்டாகலாம். சீதள நோய், பல், காது, மூக்கு போன்ற அங்கங்களில் பாதிப்பும் உண்டாகும். நீங்கள் முன்யோசனையுடன் நடந்துகொள்வது அவசியமாகும். சிலருக்கு சிகிச்சையும் இடம் பெறும். குடும்பத்தில் கணவனோ மனைவியோ கடுமையான ஆரோக்கிய பாதிப்புக்கு உள்ளாவர். இந்த நேரத்தில் மனத்தளர்ச்சி அடையாமல் செயல்படுவது அவசியம். வரவேண்டிய பணத்திற்கு வழக்கு தொடர்வது கூட இருக்கலாம். சகோதர வகையில் மனக்கசப்பான போக்கும் இருக்கும். குடும்ப சொத்து இதர பொருட்கள் காரணமாகவும் இந்த சூழ்நிலை உருவாகக்கூடும். இம் மாதம் நடுப்பகுதிக்கு மேல் நினைத்ததை முடிக்கும் சூழ்நிலை உருவாகி வரும். நேர்மையான தூரத்துக் கடிதம் சுப விஷயங்களை தாங்கி வரும். குடும்பத்தில் உறவினர் வருகை, விருந்து செலவு போன்ற மகிழ்ச்சியான நிகழ்ச்சிகள் இருக்கின்றன. உறவினர்களுக்கு அவசிய செலவு உண்டாகும். தேக ஆரோக்கியத்திற்கும் குறைவு இல்லை. பிற்பகுதியில் கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கின்றன. லாட்டரி, போட்டி, பந்தயம், விளையாட்டு வகைகளும் உங்களுக்கு அனுகூலமாக வந்துவிடும். உடன் இருப்பவர்கள் உங்களை பேசியே கெடுத்துவிடுவர் எச்சரிக்கை. பிரயாணம் திடீர் என்று தடையாகும். புத்திரர், புத்திரியர் வகையில் மருத்துவச் செலவு இருக்கின்றன. சிலர் குடியிருக்கும் இடமாற்றத்தைப் பெறுவது குறிப்பிடத்தக்கது. பணம் நெருக்கம் படிப்படியே உறவினர் வழியை விட வெளி வட்டாரம் சிறப்புமிக்கது. சிலசமயம் சுகம் அனுபவிப்பதும் வெளியில் இருக்கும் புதிய நண்பர்கள் சிலரை சேர்க்கவேண்டிய காலமிது. தூர தேச பயணங்கள் ஒரு சிலருக்கு கைகூடி வரும். செய்தொழில் எதுவாயினும் தீவிர கவனம் வேண்டும். சனி மாற்றம் அடையப் போகிறான். வேகம் குறைய ஆரம்பித்துவிட்டன என்பதை கவனிக்கவும். ஒட்டி உறவாடி வந்த நண்பர்களும் சட்டென விலகிக் காணப்படுவர். அரசாங்கத்தின் கண்காணிப்பு அதிகரிக்கும். வரவு எவ்வளவுதான் வந்தாலும் பணம் கையில் தங்காது. குடும்பத்தில் பொதுவாக திருப்தியற்ற நிலை காணப்படும். அதிக அலைச்சல், தூக்கமின்மை காரணமாக உடல் ஆயாசம் இருக்கும். தகுந்த ஓய்வு தேவை. வண்டி, வாகனங்களை மாற்றிடவோ அல்லது விற்றிடவோ நேரும்.

### கடகம்
(புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்)

உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு அலுவலகப் போக்கு மகிழ்ச்சி உடையதாகவும், மனநிறைவு உடையதாகவும் இருக்கும். பெரிய மாற்றங்கள் ஏதும் இல்லை. இலாகா மாற்றங்கள் இருக்கும். உறவினர் உங்கள் வீடு தேடி வருவர். விருந்துக்கு பஞ்சமில்லை. வேடிக்கை நிகழ்ச்சிகளையும் கண்டு களிப்பீர்கள். குடும்பச் சொத்து வகையில் இருக்கும் வழக்கு தள்ளிப்போய்விடும். குழந்தைகள் முன்னேற்றம் மகிழ்ச்சியை அளிப்பதாக இருக்கும். அவர்கள் முன்னேற்றத்தில் உங்கள் முயற்சி அதிகமாக இருக்கும். சிலருக்கு அயல்நாடு சென்றுவரும் வாய்ப்பும் உருவாகி வரும். நீங்கள் குறித்த காலத்தில் செயல்படும் விதம் செம்மையாக இல்லாத காரணத்தால் தொழில் மந்தம் என்பதும் தானே வரக்கூடியவைதான் இருக்கிறது. உங்களுக்கு அரசாங்க ஊழியர்களால் இந்த மாதம் எவ்வித நன்மையும் இருக்காது. மேலும் இந்த நேரத்தில் குடும்பத்திலும் கடன்பட்டாவது சுப காரியங்களை நிறைவேற்றுவீர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. கூட்டுத் தொழில் உள்ளவர்கள் இப்போது முக்கிய பொறுப்புகளிலிருந்து விலகி இருப்பதும் நன்மையே. உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு இது பிரச்சினை உடையதாகத்தான் இருக்கும். பொலிஸ், இராணுவத்துறையில் உள்ளவர்களுக்கு இடமாற்றம், இலாகா மாற்றம் சிலருக்கு வெளியூர் மாற்றமும் இருக்கக்கூடும். நோய் இல்லா சனியாக இருப்பதால் சிலருக்கு காலில் தொடர்ந்து ஆறாத காயமும் இருக்கக்கூடும். சிலருக்கு இரண்டாவது குடும்பமும் உண்டாகும். இதற்குக் காரணம் குடும்ப இல்லத்தில் சுபப்பாராதது. கலைத்துறையே தொழிலாக உடையவர்களுக்கும் தனம் கொடுக்கல், குடும்பம் இந்த வகையில் பிடிப்பான பேர்க்கும், சச்சரவு நிறைந்ததாகவும் இருக்கும். தொழில் மூலம் உங்கள் கௌரவத்தை உயர்த்திக்கொள்ளுங்கள். குடும்பத்தில் சூழ்நிலை அமைதியாக இருக்கின்றன. குழந்தைகள் ஆரோக்கியம், கல்வி நிலையும் திருப்தியாக இருக்கின்றன. புண்ணிய ஸ்தல பிரயாணமும் கூட இடம்பெறும். இப்போது சுக்கிரன் உங்கள் நட்புக்கிரகமாக இருந்து நீச்சம் பெற்றது. சுயதொழில், கலைப்பிரிவினர், எழுத்தாளர் போன்றவர்களுக்கும் அடுத்தடுத்த முயற்சியில் வெற்றியைக் கொடுக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. சனி என்பதை மனதில் கொண்டு பயப்படுவதிலும் பயன் இல்லை. எப்படிப் பார்த்தாலும் படிப்படியாக மேன்மை இருக்கத்தான் செய்யும். உடன் குருவை கவனிக்க வேண்டும் இல்லையா? கணவன், மனைவி உறவு மனதுக்கு இதமாக இருக்கும். சிலருக்கு திடீரென அயல்நாட்டுப் பிரயாணம் உண்டாகும். நடுப்பகுதிக்கு மேல் நினைத்ததை முடிக்கும் சூழ்நிலை உருவாக்கக் கூடும். நேர்மையான நண்பர்கள் சிலர் மூலம் வழக்கு குடும்பத்தில் சூழ்நிலை மாற்றமடைந்துவிடும். தூரத்து கடிதம் சுப விஷயங்களைத் தாங்கி வரும். குடும்பத்தில் உறவினர் வருகை விருந்து செலவு போன்ற மகிழ்ச்சியான நிகழ்ச்சிகள் இருக்கின்றன.

### சிங்கம்
(மகம், பூரம், உத்தரம் 1)

இம்மாத ஆரம்பநாள் சரசு சனியோடு ஆட்சி பெற்று விரயத்து சந்திரனோடு கூடிய நீச செவ்வாய், உறவினர் வருகை மகிழ்ச்சி தருவது தான் என்றாலும் செலவுகள் அதிகம். கடைப்பகுதி முடிவில் பிரயாணம் இருக்கிறது. தொழில் கூட்டு மனிதர்கள் இப்போது இணக்கமாக இருப்பதுடன் இன்னுமொரு இடத்தில் ஸ்தாபிதம் செய்வதும் சிலருக்கு முக்கிய அம்சமாக இருக்கும். இரு குடும்பம் உள்ளவர்களுக்கு குடும்பத்து சச்சரவு நீங்கி அமைதி ஏற்படும் காலமாகும். இந்த ராசிப் பெண்கள், ஆண்களும் உஷ்ண பிணியினால் பாதிக்கப்படுவர் என்பதால் இருதய சம்பந்தமான நோயும் தோன்றக்கூடும். தொடர்ந்து காரிய சித்தியை பெறுவீர்கள் என்பதில் சந்தேகமில்லை. விட்டுப்போன பழைய விஷயங்கள் சில பேச்சளவில் மீண்டும் தொடரும். மனம் விட்டுப் பேச முடியாமல் இருந்த காரியங்கள் செயலுக்கு வரும் காலம். திடீர் வருவாயை உண்டாக்குபவன் குரு. குடும்ப உறவில் நடக்கும் சுப விஷேடங்களில் கலந்து கொள்வது விருந்து உண்பதும் உண்டு. போட்டி, பந்தயம், விளையாட்டு போன்றவைகளிலும் உங்களுக்கு ஆதாயம் இருக்கிறது. பழைய கடன்கள் குறித்து மாற்றுவழி முயற்சிகள் இருக்கும். சில வகையில் உறவினர் இணைந்து வர மாட்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. பிரயாணம் அலைச்சல் உடையதாகவே இருக்கும். குடும்பத்தில் புகைச்சல் இருக்கும். மற்றவர் உங்களை குறைகூறத்தான் செய்வார்கள். குடும்ப வகையில் அதிகமான கவனம் செலுத்தவும். தொழில் வழியில் எவ்வளவுதான் வேகம் இருந்தாலும் ஆதாயம் குறைவுதான். அலைச்சல், அகால உறக்கம், தேக உஷ்ண அசௌகரியமும் உண்டாகும். அரசாங்க உயர்மட்ட மனிதர்களின் சந்திப்பு அவசர பிரச்சினைகளை முடிப்பதற்கு அவசியமாக இருக்கும். இப்போது பல வழி முயற்சியை உடன் இருப்பவர்களும் ஆதரிப்பதாக இருந்த போதிலும் அவைகள் ஓரளவே பலன் தருவதாக இருக்கும். நீங்கள் சாமர்த்தியமாக செயல்படுவதுதான் பாராட்டுக்குரியதாக இருக்கும். நீங்கள் சேர்த்து வைத்தபணம் செலவழிக்கும் வழி சரியாக இருக்காது. பிரயாணம் மேற்கொள்வது நல்ல சூழ்நிலையைப் பெறுவது, தன வரவும் உண்டாகும். அதன் பிறகு மனிதர்கள் சிலரின் உதவியை நாடவேண்டியும் இருக்கும். உத்தியோகப் பிரிவு ஆண்,' பெண்களுக்கு இடமாற்றம், இலாகா மாற்றம் போன்றவைகள் உண்டாகும். அரசியல்வாதிகளுக்கு நண்பர்களிடம் இருந்த நட்பு முறை நன்றாக இருக்காது. சிலசமயம் கசப்பான சூழ்நிலையும் இருக்கிறது. போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வகையில் கடைசியில் ஆதாயமும் பாராட்டும் உண்டாகும். சிலருக்கு அயல்நாட்டு கடிதத் தொடர்பு உண்டாகும். தனநிலை தன்னம்பிக்கையூட்டும் சில வகையில் உங்களை பாரிய பொறுப்புகளில் ஈடுபடுத்திக் கொள்ளப்போகிறீர்கள் என்பதில் மனச்சலனமின்றி இருக்க வேண்டும்.

### கன்னி
(உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2)

உங்கள் கௌரவத்தில் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும். காது, பல் சம்பந்தமான பிணி பாதிக்கவும் வாய்ப்பு இருக்கிறது. உத்தியோகப்பிரிவினர்கள் தாங்கள் நினைத்ததை சாதனை புரிந்திடுவர். தனக்கு எதிராக இருந்தவர்களை மாற்றல் மூலம் மற்றவர்கள் அன்பைப் பெறுவது, மறைத்து வைக்கப்பட்ட காரியங்கள் சிலவற்றை கொண்டு வருதல் மனத்திருப்தியளிக்கும் அமைதிக்கும் காரணமாகும். மாணவ, மாணவிகளுக்கு கல்வி பெருமை தரும். நல்ல ஆரோக்கியம் உடையவர்கள்தான் என்றாலும் இப்போது மிக மிக கவனமாகப் பார்க்க வேண்டும். குறிப்பாக, கர்ப்பிணிகள் எச்சரிக்கை எடுக்கவேண்டும். சிலவகையில் நீங்கள் தனித்து நில்லாமல் உடன் இருப்பவர்களால் பாராட்டுச் செயல்களைத் துரிதப்படுத்துவதாகவும் இருக்கும். குடும்பத்து வேலைகள் மகிழ்ச்சிக்குரிய அளவில் வேகமாக இருக்கும். தாமதப்பட்ட காரியங்களில் தனவரவும் இருக்கும். சுப விஷேடத்தை பூர்த்தியாக்க நீங்களும் உங்களைச் சேர்ந்தவர்களும் அலைச்சல் உடையவர்களே. இதனால் சிலசமயம் உடல் சீதள பேதியும் மருத்துவ சிகிச்சையும் அவசியமும் அவசரமும் ஆகும். குடும்ப வேலைகளை படிப்படியே பூர்த்தியாக்கிக் கொண்டு போகலாம். இப்போது ஏழரைச்சனியின் பலம் குறைந்துவிட்டதை உணருவீர்கள். தூரத்து மனிதர்கள் தொழில் சம்பந்தமான ஒப்பந்தத்திற்கு உறுதுணையாக இருப்பர். குழந்தைகள் கல்வி உயர்வு குடும்பத்திற்கு புது உடைகள் சேர்க்கையும் உண்டாகும். எதிலும் தைரியத்துடன் செயல்பட வேண்டும். தொழில் வகையில் ஏற்பட்ட மந்த நிலை மாதம் நடுப்பகுதிக்கு மேல் விலகிவிடும். கூட்டு மனிதர்கள் குறித்தபடி செயல்படுவதும் குறிப்பிடத்தக்கதாக இருக்கும். மாதம் ஆரம்பத்தில் ஏற்பட்ட மனபேதங்களை அகற்றிவிடலாம். சில வகையில் நீங்கள் மறைத்து செய்த காரியங்கள் வெளியாகி விட்டதால் மனச் சலனம் தோன்றி மறையும். விலக்கிவிட்ட ஆள் மீண்டும் உங்களை நாடுவர். கலைத்துறையினர்கள் புதிய ஒப்பந்தம் செய்வது பணவரவு, பாராட்டு விருதுகளும் பெறும் வாய்ப்பு உண்டாகும். வழக்கு வகையில் பயப்பட வேண்டியவை ஒன்றும் இல்லை. சத்ருக்கள், கடன் வகையும் அப்படியே. சனி உங்கள் யோக அதிபதி. அரசியல் வகையினர் உங்கள் செயலுக்கு மிகவும் நெருங்கி இருக்கின்றனர். ஒப்பந்தத் தொழிலில் உள்ளவர்கள் பழைய வேலைகளை முடித்துக்கொடுக்காதிருக்கும்போதே வேறு புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டி இருக்கும். சிலர் புதிய கட்டடம் கட்டுவது, பழைய இல்லம் புதுப்பித்தல் போன்ற வகையில் செலவு உடையவராக இருப்பர். போட்டி, பந்தயம், விளையாட்டு போன்றவைகளில் சுமாரான ஆதாயம்தான் இருக்கும். உத்தியோகப் பிரிவினர்களுக்கு இடமாற்ற பிரச்சினை முன் நிற்கும். உங்கள் செயலில் வேகம் பிறந்துவிடும். சனியைப் பற்றி நினைத்துக் கொண்டே இருக்காதீர்கள். செய்தொழில் வகையில் சில மாற்றங்களை செய்யப் போகிறீர்கள்.

(தொடரும்...)

ஒவ்வொருவரும் தனது சொந்த நலனைப் பொருட்படுத்தாமல் நாட்டு நலனும் சமுதாய முன்னேற்றமுமே பெரிதெனக் கருதி பாடுபடவேண்டும்.

*- டாக்டர் இராதாகிருஷ்ணன்*

வலம்புரி

## சட்டங்களை அமுல்படுத்த அரச அமைப்புக்கள் முன்வரவேண்டும்

சட்டம் என்பது மக்களை ஒழுங்குபடுத்தும் கருவி. அதனை சரியான முறையில் அமுல்படுத்துகின்றபோது நாட்டில் கொலை, கொள்ளை, களவு போன்ற தீயசெயல்களுக்கு இடமில்லாமல்போகும்.

எனினும், சட்டங்களை அமுல்படுத்த வேண்டியவர்கள் பாராமுகமாக இருந்தால் நிலைமை படுமோசமாகவே இருக்கும். இது விடயத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் முதல் உயர்நீதிமன்றங்கள் வரை தமது கடமைகளைச் செய்வதில் அதி தீவிரம் காட்டவேண்டும்.

அவ் வகையில், யாழ்ப்பாணக் குடாநாட்டில் இயங்கும் உள்ளூராட்சி மன்றங்கள் தமது கடமைகளை - தத்தம் பிரதேசத்தில் அமுலாக்கப்பட வேண்டிய அடிப்படைச் சட்டங்களை நடைமுறைப் படுத்துவதில் பின்நிற்பதைக் காணமுடிகின்றது.

குறிப்பாக, யாழ். குடாநாட்டில் வீதிகளில் திரிகின்ற கட்டாக் காலி ஆடு, மாடு மற்றும் நாய்களின் நடமாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இதனால் ஏற்படும் விபத்துக்கள் மனித உயிர்களைக் காவுகொள்கின்றன.

கால்நடைகளை வளர்ப்பது தவறன்று. ஆனால், அவற்றை கட்டி வளர்க்க வேண்டுமென்பது உள்ளூராட்சி மன்றங்கள் கூறும் சட்டமாகும். அவ்வாறாயின் யாழ். குடாநாட்டில் கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரித்து வருவதற்கான காரணம் தான் என்ன?

உள்ளூராட்சி சபைகள் இயங்குகின்றன. அவை அறவிடப்படவேண்டிய வரிகளை அறவிடுகின்றன. அங்கு கடமையாற்றுகின்ற ஊழியர்கள் சம்பளம் பெறுகின்றனர். இவ்வாறு உள்ளூராட்சி சபைகள் தங்கு தடையின்றி இயங்கும்போது கட்டாக்காலிகளைக் கட்டுப் படுத்துவதில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லையாயின், எங்கோ, ஏதோ தவறு நடை பெறுகின்றது என்பது புலனாகின்றது அல்லவா?

கால்நடைகளைக் கட்டி வளர்க்கவேண்டும் என்ற சட்டம் பொதுமக்களின் காதுகளில் உரத்து கூறப்படுவதும், அதனை அவர்கள் நடைமுறைப் படுத்தத் தவறும்பட்சத்தில் கிடைக்கக்கூடிய தண்டனைகளை தெளிவுபடுத்துவதும் உள்ளூராட்சி மன்றங்களின் தலையாய கடமையாகும்.

இதனை முதலில் செய்யும்போது சட்டத்தை மதிக்கின்ற மக்கள் அதற்கு கட்டுப்படுவர். அதன் பின்னர் இருக்கக்கூடிய தவறுகளுக்கு தண்டனைகளே வழியாகும்.

தண்டனைகளை விதிக்கும்போது இருக்கக் கூடிய மிகப்பெரிய விடயம் பக்கச் சார்பற்ற தீர்ப்பாகும். அதாவது செல்வாக்கு என்ப தற்கு எவ்விடத்திலும் இடமில்லாது போகின்ற போது சட்டத்தை அமுல்படுத்துவதும், அதனை பின்பற்றச் செய்வதும் சுலபமாகிவிடும்.

யுத்தத்தால் பாதிப்படைந்த யாழ். குடாநாடு யுத்தத்தால் மட்டும் அழிந்துபோகவில்லை. மாறாக சட்டங்கள், சம்பிரதாயங்கள் என்பவற்றை மதிக்கும் மனநிலையும் மாறி இன்று மிகப்பெரும் சீரழிவை நாம் சந்தித்து வருகின்றோம்.

சட்டங்களை மதிப்பதில் தவறுகள் ஏற்படுகின்றபோதே குழப்பங்களும், ஆபத்துக்களும் நடக்கின்றன. மதில்கட்டுவது முதல் கால்நடைகள் வளர்பபது வரை இருக்கக்கூடிய சட்டங்களை, அது தொடர்பில் பெற்றுக்கொள்ளவேண்டிய ஆவணங்களை பொதுமக்களுக்கு தெரியப்படுத்துவதன் மூலம் நீதிமன்றங்களில் குவிகின்ற வழக்குகளையும் பொதுமக்கள் செய்கின்ற செலவுகளையும் குறைத்துக்கொள்ளமுடியும்.

## மாணவர்களின் பிரேத பரிசோதனை அறிக்கையை உடனே வெளியிடுமாறு ஆயர்கள் வலியுறுத்தல்

(கொழும்பு)

திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ்மாணவர்களின் பிரேத பரிசோதனை அறிக் கையை உடனே வெளியிடவேண்டும் என்று இலங் கையில் உள்ள கத்தோலிக்க ஆயர்கள் மற்றும் தேசிய கிறிஸ்தவ சபை நிர்வாகிகள் வலியுறுத்தியுள்ளனர்.

கத்தோலிக்க ஆயர்கள் மாநாட்டுத் தலைவரும் கண்டி ஆயருமான வியன்னி பெர்னாண்டோ, துணை த்தலைவர் மன்னார் ஆயர் ராஜப்பு யோசப்பு, கொழும்பு ஆயர் ஒஸ்வால்ட் கோமிஸ், சிலாபம் ஆயர் பிராங் மார்க்கஸ் பெர்னாண்டோ, யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, குருநாகல் ஆயர் ரேய்மண்ட் பீரீஸ், கொழும்பு இணை ஆயர் மனுஸ்பீரிஸ், பதுளை ஆயர் வின்ஸ்டன் பெர்னாண்டோ, காலி ஆயர் ஹறோல் அந்தோனி, அனுராதபுரம் ஆயர் நேர்பெர்ட் அந்த்ரேதி உள்ளிட்டோர் வெளியிட்டுள்ள கூட்ட றிக்கையிலேயே இவ்வாறு வலியுறுத்தப் பட்டுள்ளது.

நாட்டில் வன்முறைக் கலாசாரம் அதிகரித்து வருகின்றமை தொடர்பில் இந்நாட்டின் மக்கள் மிகுந்த கவலை கொண்டுள்ளனர். கொலைகளுக்காக கொலை கள் தொடர்ந்தாலும் இந்தப் படுகொலைகளைநிறுத்துவ தற்கான பொறுப்பை ஏற்க எவரும் முன்வரவில்லை.

வடக்கு-கிழக்கில் மட்டுமல்ல நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நாளாந்தம் இந்த வன்முறைத் தகவல்கள் வந்துகொண்டே இருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கும் கொழும்பிலிருந்து மட்டக்களப்பு, மன்னார் என்றும் அமைதியாக இருந்த திருகோண மலைக்கும் இந்த வன்முறைகள் சென்றுள்ளன.

அண்மையில் திருகோணமலையில் இளம் மாணவர்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டது மிக ஆழமான அதிர்ச்சியை மக்களின் இதயங்களின் ஏற்படுத்தியுள்ளது.

துப்பாக்கிச் சூடுகளினால் இந்த மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டதாக மருத்துவ அறிக்கை கள் கூறுகின்றன என்று சிலநாளேடுகள் செய்தி வெளியிட்டுள்ளன.

மற்றொருதரப்பினரோ கைக்குண்டுத்தாக்குதலினால் தான் மாணவர்கள் இறந்தனர் என்று கூறுகின்றனர். சுயாதீன ஆணைக்குழுவின் விசாரணைமூலம் வெளிவரும் உண்மைகளை அனைத்துத்தரப்பினரும் ஏற்றுக் கொள்ளவேண்டும். எனினும் இளம் மாணவர்கள் மீதான இந்த அநியாயப்படுகொலை சம்பவத்தை நீதியையும் அமைதியையும் விரும்புவோர் அனைவரும் எதுவித தயக்கமுமின்றி கண்டிக்கவேண்டும்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இந்த இளம் மாணவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்தப்படுகொலைகள் தொடர்பில் விசாரணை களைநடத்த ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதை நாம் வரவேற்கிறோம். இந்த விசாரணைகளுக்கு அனைத்துத்தரப்பினரும் உரிய தகவல்களை தெரிவிக்கவேண்டும். முதற்கட்டமாக இந்த மாணவர்கள் படுகொலை தொடர்பான பிரேத பரிசோதனை அறிக்கையை வெளியிடவேண்டும். இந்த செயற்பாடு மூலம் பக்கச் சார்பற்ற நீதியை வெளிப்படுத்தமுடியும்.

அத்துடன் அப்பாவிப் பொதுமக்கள், அரசபடை யினர், விடுதலைப்புலி உறுப்பினர்கள் அல்லது இதர குழுக்களின் உறுப்பினர்கள் கொல்லப்படுவதைக் கண்டிக்கிற குரல்களோடு நாங்களும் இணைந்து கொள்கிறோம். இந்த அர்த்தமற்ற படுகொலைகளை முடிவுக்குக்கொண்டுவர வேண்டும் என்று அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டறிக்கையில் கிறிஸ்தவ தேவலா யங்களின் தலைவர்கள் மற்றும் இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சபை நிர்வாகிகளும் கையெழுத்திட்டுள்ளனர். (கு)

## சந்திரிகாவின் வேண்டுகோளை பிரான்ஸ் ஏற்றதற்கு இலங்கை அரசு கடும் அதிருப்தி

(கொழும்பு)

முன்னால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கோரிக்கையை ஏற்று அவரது பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு பயிற்சிவழங்க பிரான்ஸ் அரசு முன்வந் துள்ளமைக்கு அரசாங்கம் தனது அதிருப்தியைத் தெரிவித்துள் ளது.

தனது பாதுகாப்பு அதிகாரிகளுக்கு மேலதிக பயிற்சி வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேரடியாக விடுத்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட பிரான்ஸ் அரசு அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் 10 பேருக்கு இருவாரகால பயிற்சி வழங்க முன்வந்துள்ளது.

ஆனால், இத்தகைய வேண்டுகோள் எவையும் அரசாங்கத்தினால்தான் நேரடியாக விடுக்கப்பட முடியுமே தவிர முன்னாள் ஜனாதிபதியால் விடுக்கப்படக்கூடாது எனத் தெரிவித்துள்ள வெளிநாட்டு அமைச்சு இது தொடர்பில் பிரான்ஸ் அரசு இணக்கம் தெரிவித்தமைக்கு தனது விசனத்தையும் வெளியிட்டுள்ளதுடன் இது இராஜதந்திர நடைமுறைகளுக்கு முரணானது எனவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இப் பயிற்சிநெறியில் பங்குபற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு அனுமதி வழங்க பாதுகபாப்பு அமைச்சு முன்னர் அனுமதி மறுத்த போதிலும் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியின் பாதுகாப்பு செயலாளருடன் நடத்திய நீண்ட தொலைபேசி விவாதத்தின் பின்னரே அனுமதி கிடைத்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பு உத்தியோகத்தர் கள் இப்பயிற்சியில் கலந்துகொள்ள தற்போதைய ஜனாதிபதியின் பாதுகாப்பு செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷவின் அறிவுறுத்தலின் பேரில் பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுத் துள்ளது.

இதையடுத்து வெளிநாட்டில் தங்கியுள்ள சந்திரிகா குமாரதுங்க தொலைபேசி மூலம் பாதுகாப்பு செயலாளருடன் தொடர்பு கொண்டு விவாதித்துள்ளார்.

இதன் காரணமாக முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்புஉத்தியோகத்தர்கள் 5பேருக்கும் தற்போதைய ஜனாதிபதியின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் 5 பேருக்கும் இப் பயிற்சிநெறியில் கலந்துகொள்ள சந்தர்ப்பம் வழங்குவதற்கு தற்போது முடிவெடுக்கப்பட்டுள்ளது.

(கு)

## இலங்கை அரசிடம் 200மில்லியன் ரூபா நட்ட ஈடு கோருகிறார் ஞானக்கோன்

(கொழும்பு)

இலங்கை தம்மை சட்டவிரேதமாக சிறையில் அடைத்து வைத்தமைக்காக அவுஸ்திரேலிய கோடிஸ்வர தமிழ் வர்த்தகர் சார்ள்ஸ்ஞானக்கோன் 200மில்லியன் ரூபா நட்டஈடு கோரியுள்ளார்.

சார்ள்ஸ் ஞானக்கோனின் சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா இது தொடர்பில் கூறுகையில்,

இலங்கை பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு இது தொடர்பில் தனித்தனியாக கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடமிருந்து 100மில்லியன் ரூபா நட்டஈடும் சட்டவிரோதமாக தம்மை கைது செய்யத பொலிஸ்மா அதிபரிடமிருந்து 100 மில்லியன் ரூபா நட்டஈட்டடையும் ஞானக்கோன் கோரியுள்ளார்.

கடந்த ஒக்டோபர் 10ஆம் நாள் எதுவித காரணமுமின்றி ஞானக்கோன் கைது செய்யப்பட்டு நீதிமன்ற மேல் முறையீட்டினால் நவம்பர் 30ஆம் நாள் விடுவிக்கப் பட்டதாக பாதுகாப்பு அமைச்சு செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது கைதானது சட்டவிரோதமானது மட்டுமல்ல நியாயமற்றது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு மாத காலத்திற்கு ஞானக்கோனின் கடிதத்துக்கு பதிலளிக்காவிட்டால் கொழும்பு மாவட்ட நீதி மன்றில் இது தொடர்பில்வழக்குதொடரவுள்ளதாகவும்கௌரி சங்கரி தவராசா கூறினார். (கு)

## வெட்டுப்புள்ளி வெளியீடு

நடந்து முடிந்த 5ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சை வெட்டுப்புள்ளிகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்படுமென்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இந்தப்பரிட்சையில் சித்தி எய்தியவர்கள் அடுத்த மாதம் முதலாம் திகதி புதிய பாடசாலைகளுக்கான அனுமதிகளினை பெற் றுக்கொள்ள முடியும் என்று அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (து-39)

### தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



பலவீனப் பிண்டங்கள் யாரும் இந்தப் பாதையை பின் பற்ற முடியாது 'நான் ஆன்மா. நான் சுதந்திரன். நான் கட்டுப்படவேயில்லை காலம் என்னில் இருக்கிறது. நான் காலத்தில் இல்லை கடவுள் என் மனத்தில் இருந்தே தோன்றினார்' இப்படிக் கூறும் தைரியம் இருக்கவேண்டும.

சுவாமி விவேகானந்தர்



திருகோணமலையில் நேற்று இடம் பெற்ற தமிழ்த்தேசிய எழுச்சி நிகழ்வில் இருந்து...

# வாழைச்சேனையில் இரு படையினர் காயம்

(வாழைச்சேனை)

வாழைச்சேனை புனானையில் இராணுவத்தினர் மீது நேற்று காலை 8.30 மணியளவில் இனந்தெரியாதவர்கள் நடத்திய தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு -பொலநறுவை நெடுஞ்சாலையில் 18 ஆம் மைல் கல்லில் இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது. தாக்குதலையடுத்து இராணுவத்தினரும் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

எனினும் தாக்குதலை நடத்தியோர் தப்பிச்சென்றுள்ளனர். படுகாயமடைந்த இரண்டு இராணுவத்தினரும் வெலிகந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந)

# நிலைமை மோசமடைந்தால்...

இருந்து சுமார் ஆயிரம் பேரளவில் பாதுகாப்புத் தேடி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்துள்ளதாக புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

எனினும் எண்ணிக்கை அதனை விடக் குறைவு என்று ஏனையவர்கள் கூறுகின்றனர்.

யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறி இராணுவத்தின் ஊடுருவல் பிரிவு தங்களின் பகுதியில் ஊடுருவியிருப்பதாகவும் நேற்றுக் காலை கிழக்கில் தங்களின் நிலைகள் மீது அவர்கள் தாக்குதல் நடத்தியிருப்பதாகவும் விடுதலைப்புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகவும் திருப்பிச் சுட்டத்தில், அவர்கள் அரசாங்க கட்டுப்பாட்டு பிரதேசத்திற்கு சென்று விட்டார்கள் என்றும் புலிகள் கூறியுள்ளனர்.

விடுதலைப்புலிகளிடம் இருந்து பிரிந்து சென்ற குழுவினராலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக இராணுவம் தெரிவிக்கிறது. ஆனால் அவர்கள் இராணுவத்தின் பராமரிப்பில் இருப்பதாக புலிகள் கூறுகின்றனர்.

கடந்த வார இறுதியில் கடற்படையின் டோறாப் படகு மீதான தாக்குதல்கள் மற்றும் தொடர்ச்சியான கண்ணி வெடித் தாக்குதல்களுக்கும் தங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை யென்று விடுதலைப்புலிகளின் மறுப்பினை இன்னும் சில இராஜதந்திரிகள் அல்லது ஆய்வாளர்கள் நம்புகின்றனர். ஆத்திரமடைந்துள்ள பொதுமக்களே இராணுவத்தினர் மீது தாக்குதலை நடத்துவதாக விடுதலைப்புலிகள் கூறுகின்றனர். ஆனால் இந்த சம்பவங்களுக்கு யார்பொறுப்பு என கூறுவதற்கான சரியான தகவல்கள் எங்களிடம் இல்லை.

ஆனால் தாக்குதலைப் பார்க்கையில் தாக்குதல்களை நடத்தியவர்கள் பயிற்சி பெற்றவர்கள் என்று தெரிகிறது. அண்மைய தாக்குதலையடுத்து சில இடங்களில் கண்காணிப்புநடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தன.

எனினும் தற்போது அந்த இடங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகள் வழமைக்கு திரும்பியுள்ளன. ஆனால் நிலைமை மோசமடையுமானால் கண்காணிப்பு நடவடிக்கைகள் கைவிடப்படும்.

நாங்கள் இங்கு வந்திருப்பது போர்நிறுத்தக்கண்காணிப்பினை மேற்கொள்ளத்தான் அது இல்லாது விட்டால் நாங்கள் இங்கிருந்து சென்று விடுவோம். நிலைமை சிக்கலடைவதுடன் பாதுகாப் பற்ற நிலைமை இருப்பதாக உணரப்படுகையில் இங்கிருந்து எதனையும் செய்ய முடியாது இங்கு இருப்பதில் எதுவித அர்த்தமும் இல்லையென்றார் ஹக்ரூப் ஹெறாக்லண்ட். (ந)

## கரவெட்டி இளைஞன் ஜேர்மனியில் மரணம்

கரவெட்டியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் ஜேர்மன் பாசிங்குசைன் புகையிரத விபத்தில் சிக்கிப்பலியாகியுள்ளார்.

ஜேர்மனியில் பெற்றோருடன் வசிக்கும் சந்திரன் வினோதன் (வயது 18) என்ற இளைஞனே விபத்தில் பலியானவராவார். இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது. (ந)

# 60 தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனம்

யாழ்.மாநகர சபை சுகாதாரப் பிரிவில் கடமையாற்றும் 60 தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. நிரந்தர நியமனத்திற்கான கடிதத்தினை மாநகர ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் நேற்று முன்தினம் வழங்கினார். (ந)

# அனுமதித்தேர்வு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் 2006 ஆம் ஆண்டுக்கான பத்திரிகையியல் டிப்ளோமா முழுநேரக் கற்கை நெறிக்கான அனுமதித் தேர்வு நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறவுள்ள இத் தேர்வுக்கு விண்ணப்பதாரிகளை அடையாள அட்டையுடன் வருமாறு பல்கலைக்கழக பதிவாளர் கேட்டுள்ளார். (ந-39)

# மரண அறிவித்தல்

## செல்வன் சந்திரன் வினோதன்

கரவெட்டி மேற்கை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் சந்திரன் வினோதன் அகாலமரணமானார். இவர் சந்திரன் லோகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் வினோதிகாவின் அன்புச் சகோதரனும் நாவற்குழிய்யச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையினார் நாகம்மா தம்பதிகள் ,காலஞ்சென்ற வீரகத்தி மற்றும் தெய்வானை ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
திரு.நி.சரவணபவன் (மாமன்)
திருமதி நா.சரவணபவன் (மாமி)
தொலைபேசி இல:-222 3076

ஜேர்மனி தொடர்பு;
தொலை பேசி: இல.
00495105514964

(அ-165)












## சிறுவர்களுக்கான கலைப் பயில்களம்

**Children fin arts training centre**

8 வயது தொடக்கம் 12 வயது வரை உள்ள சிறுவர்களுக்கான நுண்கலைப் பயிற்சிப் பயிலகம் ஒன்று செயல்திறன் அரங்க இயக்கத்தால் 30ம் திகதிக்கு முன் ஆரம்பிக்கப்பட உள்ளது. இதில் பின்வரும் கலைகளில் பயிற்சி பெற விரும்புபவர்கள் இணைந்து பயிற்சிகளைப் பெறலாம். பயிற்சிகள் வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சையில் தோற்றக் கூடியதாக வழங்கப்படும்.

**பயிற்சிக்கான கலைகள்**

- நாடகம்
- மிருதங்கம்
- நடனம்
- வாய்ப்பாட்டு
- மேலைத்தேச இசைக்கருவியான ரம்ஸ்

**கலைப்பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும் நாட்கள்:**

சனி, ஞாயிறு, மற்றும் கிழமை நாட்களில் (மாலை நேரம்)

**பயிற்சிகள் நடைபெறும் இடம்:**

செயல்திறன் அரங்க இயக்கம்
அருளகம், ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள விரும்பின் மேற்படி முகவரியில் உள்ள எமது அலுவலகத்தில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.

## அரங்க வள நிலையம்

**Theatre Resource Centre**

செயல்திறன் அரங்க இயக்கம் 2006ம் ஆண்டு அரங்க வள நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. இப் பயிற்சி நிலையத்தில் நாடக அரங்கப் பயிற்சிகள் ஆரம்பமாக உள்ளன.

**G.C.E O/L** மாணவர்களுக்கான நாடக அரங்கப் பயிற்சி

நாடகத்தை ஒரு பாடமாகப் பயிலுவோர் இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம். பயிற்சி பாடத்திட்டத்தின் செயல்முறைச் செயற்பாட்டின் அடிப்படையில் அமையும்..

**G.C.E A/L** மாணவர்களுக்கான நாடக அரங்கப் பயிற்சி

உயர்தரத்தில் நாடகத்தைப் பயிலுவோர் இப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம். பாடத்திட்டத்தின் செயல்முறை அடிப்படையில் பயிற்சி அமையும்.

சனி, ஞாயிறு தினங்களிலும், கிழமை நாட்களில் மாலை நேரத்தில் பயிற்சிகள் நடைபெறும்.

விண்ணப்ப முடிவு திகதி 20.01.2006

பயிற்சிகள் நடைபெறும் இடம்:

செயல்திறன் அரங்க இயக்கம்
அருளகம், ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள விரும்பின் மேற்படி முகவரியில் உள்ள எமது அலுவலகத்தில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.01.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.